பக்கங்கள்: 12
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை 20.11.2018 கதிர் 15

**இனி இது ரகசியம் அல்ல!**

நேற்றுக்காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதினான்கு பேரும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தலைமையில் அவரது அலுவலகத்தில் கூடி அரசியல் நிலைவரம் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

பக்கம் 02

# மஹிந்தவை முடக்க ஐ.தே.க. புது வியூகம்

## பிரதமர் அலுவலகத்துக்கான நிதியைத் தடுக்கப் பிரேரணை

கொழும்பு, நவம்பர் 20

சர்ச்சைக்குரிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மறுத்து வரும் நிலையிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரைப் பதவிநீக்க மறுத்து வரும் நிலையிலும், பிரதமர் செயலகத்தைச் செயற்படவிடாமல் முடக்கும் புதிய நகர்வு ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கியுள்ளது.

பக்கம் 11



# வெட்கமற்ற மஹிந்த பிரதமர் பதவியை உடனே இராஜினாமா செய்ய வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தல்



கொழும்பு, நவ. 20

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலமின்றி ஒருவர் பிரதமராக இருக்க முடியாது. எனவே, மஹிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதே சம்பிரதாயமாகும்.

பக்கம் 11

# சர்வதேச நாடுகளின் தூதர்களுடன் சம்பந்தன் இன்று முக்கிய சந்திப்பு

## அரசியல் நிலைமை குறித்து விளக்குவார்

கொழும்பு, நவ. 20

இலங்கையில் உள்ள உலக நாடுகளின் தூதுவர்களை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் இன்று மாலை சந்தித்து முக்கிய பேச்சு நடத்தவுள்ளார்.

பக்கம் 11

# கூடிச் சில நிமிடங்களிலேயே நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

## அடுத்த அமர்வு வெள்ளிக்கிழமை

கொழும்பு, நவ. 20

நாடாளுமன்றத்தின் அமர்வு வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு நாடாளுமன்றம் கூடியபோது, உடனடியாகவே நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

பக்கம் 11

# மஹிந்தவை எதிர்த்து 122 எம்.பிக்களும் ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம்

## விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, நவ. 20

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்த 122 எம்.பிக்களையும் இணைத்துக் கொழும்பில் பெரும் போராட்டம் ஒன்றை

பக்கம் 11

# சபையில் அமைதி மைத்திரி மகிழ்ச்சி

கொழும்பு, நவ. 20

நாடாளுமன்றில் நேற்று அமைதியைப் பேணியமைக்காக அனைவருக்கும் நன்றி என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நான்காவது நாளாக நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்குக் கூடிய நாடாளுமன்றம்

பக்கம் 11

# நாடாளுமன்றத்துக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு

## பார்வையாளர் கலரியும் மூடப்பட்டது



கொழும்பு, நவ. 20

பெரும் அரசியல் பரபரப்புக்குமத்தியில் நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. நேற்று சபைக்குள்ளும், நாடாளுமன்ற வளாகத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பக்கம் 11

# சட்ட விரோதமான நிழல் ஆட்சியின் நிதி நடவடிக்கைகளை முடக்குவோம்

## மனோ கணேசன் சூளுரை



கொழும்பு, நவ. 20

சட்டரீதியற்ற நிழல் ஆட்சியின் நிதி நடவடிக்கைகளை நாம் முற்றாக முடக்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளு

பக்கம் 11

# ஞானசாரரை பொதுமன்னிப்பில் விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

## பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்



கொழும்பு, நவ. 20

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல

பக்கம் 11

# மஹிந்த அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடரும்!

## ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 20

தற்போதைய சட்டவிரோத அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்

பக்கம் 11

# சபாநாயகருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, நவ. 20

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்

பக்கம் 11

# மஹிந்த அணிக்கு 'ஒஸ்கார்' விருது

## சஜித் பிரேமதாஸ பரிந்துரை

கொழும்பு, நவ. 20

சபையில் இன்று வாக்கெடுப்புநடத்தாதலாலேயே நாடாளுமன்றத்தை முடக்கும் நடவடிக்கையில் மஹிந்த அணி இறங்கவில்லை என்று ஐக்கிய தேசியக்

பக்கம் 02

# முல்லை பாடசாலையொன்றில் மதிய உணவுக்குள் முழுப் பல்லி

## 39 மாணவர்கள் வைத்தியசாலையில்



முல்லைத்தீவு, நவ. 20

முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் பாடசாலையில் நேற்று வழங்கப்பட்ட மதிய உணவில் பல்லி ஒன்று

பக்கம் 11

# தூதுவர்கள் ரணிலையே பிரதமராக ஏற்றுள்ளனர்

## கூறுகிறார் அஜித் பீ பெரேரா

கொழும்பு, நவ. 20

வெளிநாட்டுமிஹ் தூதுவர்கள் இன்னமும் உத்தியோகபூர்வப் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவையே ஏற்றுக் கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டின் செல்லுபடியாகும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை தூதுவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ரணில்கூறினால்தூதுவர்கள் வருவார்கள். மற்றவர்கள் கூறினால் வரமாட்டார்கள். உண்மையான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு இராஜதந்திரிகள் அலரி மாளிகைக்கு வருகை தந்து அவரைச் சந்தித்து கலந்துரையாடல்கள் மேற்கொண்டார்கள்.

இதன்போது பேசப்பட்ட விடயங்களை என்னால் வெளியே கூற முடியாது. அது இராஜதந்திரிகளின் கலந்துரையாடல்கள். இந்த நாட்டை ஆட்சி செய்வது நாங்கள். எங்களிடமே மக்கள் பலம் உள்ளது. எனவேஎங்களால் நாடாளுமன்றத்தை நடத்திச் செல்ல முடியும் – என்றார். (ஐ)

# வெளிநாட்டு சிகரெட்டுடன் பெண் உட்பட இருவர் கைது



கொழும்பு, நவ. 20

டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த பெண்ணொருவர் உட்பட இரண்டு நபர்கள் 27 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளைச் சட்டவிரோதமான முறையில் கடத்த முயற்சித்த சந்தேகத்தின் பேரில் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது மதுரங்குளியைச் சேர்ந்த 49 வயதுடைய பெண்ணொருவரும் நாத்தாண்டியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆணொருவருமேஇவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதுரங்குளியவைச் சேர்ந்த பெண் தனது பயணப்பொதியில் 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 19,920 வெளிநாட்டு சிகரெட்டுகளை மறைத்துச் சட்டவிரோதமான முறையில் கடத்த முயற்சிக்கையில் கைது செய்யப்பட்டார். அதேபோல் நாத்தாண்டியை சேர்ந்தவர், 1,740,000 ரூபா பெறுமதி வாய்ந்த 34,800 வெளிநாட்டு சிகரெட்டுகளைத்தனது பயணப் பொதியில் மறைத்து வைத்தே நாட்டுக்குள் கடத்த முயற்சித்துள்ளார்.

இருவரின் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கையினால் சுங்கப் பிரிவு பொலிஸாரால் அவர்கள் தடுத்து பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர். இதன்போது இருவரிடமிருந்தும் கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளைச் சுங்க பிரிவு பறிமுதல் செய்து மேலதிக விசாரணைகளும் மேற்கொண்டுள்ளது. (ஐ)

# மஹிந்தவின் பிறந்த நாள் போஸ்டர் அரச செலவில்!

கொழும்பு, நவ. 20

மஹிந்த ராஜபக்ஷவின் 73ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நாடு முழுவதும் போஸ்டர் ஒட்டும் நடவடிக்கை ஒன்றுமுன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகத்தினால் அச்சிடப்பட்ட அந்த போஸ்டர்கள் அரச செலவில் நாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மஹிந்தவின் பிறந்த தினத்திற்காக நாட்டு மக்களின் பணம் செலவிடப்பட்டமை பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

இதேவேளை, மஹிந்தவின் பிறந்த நாளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட புண்ணிய தானம் வழங்கும் நிகழ்வுகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

நாரஹென்பிட்டி அபயாராம விகாரையில் இடம்பெற்ற தான நிகழ்வில் ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு மஹிந்தவுக்கு மேலும் சக்திகள் மற்றும் தைரியம் கிடைக்கவேண்டும் என வேண்டிக்கொள்வதாக மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார். (ஐ)

# குண்டு துளைக்காத கார்கள் கொண்டு வரப்படவில்லை

## பிரதமரின் ஊடகப் பிரிவு மறுப்பு

கொழும்பு, நவ. 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் குண்டு துளைக்காத 2 கார்கள் கொள்வனவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் செய்தியில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமருக்கு இரண்டு குண்டு துளைக்காத கார்கள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் செய்திக்கு மறுப்பு தெரிவித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதமருக்கு இதுவரை புதிய வாகனங்கள் எடுப்பதற்காக உத்தரவிடப்படவில்லை எனவும் பிரதமர் ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது. (ஐ)

### மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்குமானால் அதை மஹிந்த தரப்பு உரிய வகையில் நிரூபித்திருக்கலாம். பெயர்கூவி வாக்கெடுப்பு நடத்துவதற்கு இணக்கம் வெளியிட்டிருக்கலாம். ஆட்சியமைப்பதற்குரிய ஆதரவு இல்லாததாலேயே சபை நடவடிக்கைகளைக் குழப்பியடித்தனர்.

இதனால் இலங்கையானது இன்று அனைத்துலக மட்டத்தில் கேலிக்கூத்தான நாடாக மாறியுள்ளது. ஜனநாயக நாடா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. மஹிந்த அணியினர் சிறப்பாக நடிக்கின்றனர். சினிமாவில் ஒஸ்கார் விருது வழங்கப்படுவது போல், அவர்களுக்கும் உயரிய விருது வழங்கப்படவேண்டும். காரணம், 'அரசியல் நடிப்பு' பிரமிக்க வைக்குமளவுக்கு அமைந்துள்ளது.

வாக்கெடுப்புக்கு அஞ்சியே கடந்த நாளகளில் நாடாளுமன்றத்தை மஹிந்தவும், அவரது சகாக்களும் வன்முறைக் களமாக்கினர். இன்று(நேற்று) வாக்கெடுப்புநடத்தாதாலேயே அமைதி காத்தனர். பெரும்பான்மை இல்லாவிட்டால் கௌரவமான முறையில், ஆட்சியை விட்டு வெளியேற வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது கபிர் காசிம், ரிஷாத் பதியூதின், எரான் விக்கிரமரத்ன, பேராசிரியர் மாரசிங்க, அஜித் பெரேரா, இஷான் விக்கிரமரட்ண ஆகியோர் அடங்கிய ஐக்கிய தேசிய முன்னணியின் எம்.பிக்கள் குழு அங்கு திடீர் விஜயம் செய்தது. கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேச அக்குழு அனுமதி கேட்டது. அனுமதிவழங்கப்பட்டது.

இருதரப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஐக்கிய தேசிய முன்னணிப் பக்கம் 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக நிற்கின்றமையை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படையாகவும், அப்பட்டமாகவும் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றது அக்குழு.

அதற்காக இந்த 122 எம்.பிக்களுக்கும் வரிசையாக இலக்கங்கள் ஒழுங்குமுறையில் வழங்கி, அந்த இலக்கங்களை அவர்கள் தாங்கிப்பிடித்தபடி ஒன்றாக ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவோ அல்லது சுதந்திர சதுக்கத்திலோ ஒன்று கூடி நின்று அதனை வெளிப்படுத்த வேண்டும். 122 எம்.பிக்களும் மஹிந்தராஜபக்ஷஅரசை எதிர்க்கின்றனர் என்று அதன் மூலம் பகிரங்கமாகக் காட்டமுடியும், காட்ட வேண்டும், அதற்கு உங்கள் ஒத்துழைப்பும் முழுப் பங்களிப்பும் வேண்டும் என்று வலியுறுத்தினர் அக் குழுவினர்.

சம்பந்தன், மாவை சேனாதி ராஜா உட்பட கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தக் கோரிக்கையைப் பரிவோடு அணுகினர். ஆனால் எடுத்த எடுப்பில் வரவேற்கவுமில்லை, அதனை எதிர்க்கவுமில்லை.

எனினும், கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த ஆதங்கத்தைஅங்குஎடுத்துக்கொட்டினார்சிறிதரன் எம்.பி.

*"இன்று உங்களுக்கு ஆட்சியமைப்பது யார், ஜனநாயகம் தப்பிப்பிழைக்குமா என்றசச்சை.*

*"ஆனால் எங்கள் மக்களின் பிரச்சினைகள் வேறு. யுத்தம் முடிந்து 9 ஆண்டுகளாகிவிட்டன. எமது அரசியல்கைதிகள் தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றனர். ஆக்கிரமிக்கப்பட்ட எமது மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. காணாமல் போனோர் பிரச்சனைக்கு இன்னும் தீர்வில்லை. பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நீக்கப்படவில்லை. பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்படவில்லை. உண்மைகள் கண்டறியப்படவில்லை.*

*"இந்தப் பிரச்சினைகளுக்காக எமது மக்கள் ஐநூறு நாள்களுக்கு மேலாக வீதிகளிலும், ஆலயங் களிலும் தொடர்ந்து தரித்திருந்து போராடுகின்றனர்.*

*"எமது மக்களின் இந்தப் பிரச்சனைகளுக்காகக் குறைந்த பட்சம் நாடாளுமன்றில் சபா பீடத்துக்கு முன்னால் கூட நாம் ஒன்று கூடிப் போராடவில்லை.*

*"எங்கள் எம்.பிக்கள் அனைவரும் எமது மக்களின் இந்தப் பிரச்சனைகளை அம்பலப்படுத்தி, உலகுக்கு உணர்வூட்டுவதற்காக ஒன்று திரண்டு கொழும்பில் போராட்டம் நடத்தினார்கள் அல்லர்.*

*"இன்னும் எமது முன்பள்ளிச் சிறார்களின் சீருடையில் இராணுவப்பிரிவின் இலச்சினைகள் தான் உள்ளன.*

*இந்த விடயங்களுக்கு எல்லாம் இதுவரை கொழும்பில் ஒன்று திரளாத எம்மவர்கள் இப்போது ரணிலைக் காப்பாற்றுவதற்காக கொழும்பில் எப்படி ஒன்று திரள்வது? அப்படித்திரண்டால் எமது மக்கள் எமது முகத்தில் உமிழ்நீரை உமிழ மாட்டார்களா? ஆகவே நாங்கள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுவது கொள்கை ரீதியில் பலத்த மனப் போராட்டத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆகையினால் இது விடயத்தில் நாம் எமது மக்களின் கருத்து நிலைப்பாட்டை ஒன்று திரட்டியே முடிவு எடுக்கவேண்டும்."* – என்றார் சிறிதரன் எம்.பி.

ஸ்ரீதரன் தமிழில் கூறிய வற்றை அங்கு வந்திருந்த ஐ.தே. கட்சி எம்.பிகளுக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த எம். ஏ.சுமந்திரன் எம்.பி., ஸ்ரீதரனின் கருத்து நிலைப்பாட்டைத் தாமும் அப்படியே வரவேற்கின்றார் என சாரப்பட கருத்து வெளியிட்டார்.

ஸ்ரீதரனின் கடும் நிலைப்பாட்டு உரையால், இந்தப்பிரமுகர் கூட்டமைப்பு நாடாளுமன்றக் கூட்டத்தாலும் அழமான அதிர்வலைகளை ஏற்படுத்த தவறவில்லை என்பதை அறிந்து கொள்ளமுடிந்தது.

- மின்னல்-

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.20

'ஒக்டோபர் 26 ஐப் புரிந்து கொள்ளல்' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் யாழ். ஸ்ரான்லி வீதி டி.எம்.ஐ. தனியார் கல்வி நிறுவனத்தில் நாளைமறு தினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு, ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மார்க்சிய குழு (யாழ்) ஏற்பாடு செய்துள்ள இக்கலந்துரையாடலில் சொ. சிவபாலன் ஆரம்ப உரை ஆற்றுவார். ஆர்வலர்களை சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

# நீரிழிவு தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.20

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நாளை புதன் கிழமை காலை 9 மணி முதல் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ். நீரிழிவுக் கழகத் தலைவர் லயன் தி. மைக்கல் தலைமையில் நீரிழிவு குறித்த சிறப்புரைகள் இடம்பெறும். அத்துடன் நீரிழிவு விழிப்பூட்டல் வில்லிசையும் தொடர்ந்து இலவச மருத்துவ முகாமும் நடைபெறும்.

பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்ளும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ. கேதீஸ்வரன் உரையாற்றுவார். சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்தவத்துறைத் தலைவர் டொக்டர் இ. சுரேந்திரகுமார், வைத்தியநிபுணர்களான எம். அரவிந்தன், எஸ். சிவன்சுதன் ஆகியோர் ஆற்றுவர். (இ)

## இளஞ்செழியனின் மெய்க்காவலர் கொலை:

# சந்தேக நபர்கள் மூவருக்கும் கடும் நிபந்தனையுடன் பிணை

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் உப பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரா சுட்டுக்கொலை செய்யப்பட்ட வழக்கின் சந்தேக நபர் மூவரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் கடும் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகரின் வாகனத்துக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்றபொலிஸ்உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளை இடைமறித்த ஒருவர், அவருடைய கைத்துப்பாக்கியைப் பறித்து அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். சம்பவத்தில் படுகாயமடைந்த சார்ஜன்ட் ஹேமாவகே சரத் ஹேமச்சந்திர யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவருக்கு உப பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அத்துடன், மேல் நீதிமன்ற நீதிபதியின் காரில் பயணித்த மற்றொருபொலிஸ்உத்தியோகத்தர் மீது சூடு நடத்தப்பட்டது. அவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நல்லூர் கந்தசுவாமியார் ஆலய தெற்கு வீதிப் பகுதியில் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தைத் தொடர்ந்து இரண்டு நாள்களில் பிரதான சந்தேக நபரான செல்வராசா மகிந்தன் என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் பாலசிங்கம் மகேந்திராசா, செல்வராசா ஜயந்தன் ஆகிய இருவரும்கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 2017ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தார். அவை விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுக் கட்டளை வழங்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரும் தொடர்ச்சியாக 16 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதால் அவர்களைப் பிணையில் விடுவிப்பதில் ஆட்சேபனை இல்லை என்று அரச சட்டவாதி தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் மூவரும் காசுப் பிணையாக தலா 2 இலட்சம் ரூபா பணத்தை வைப்பிலிட வேண்டும். மூவரும் 5 லட்சம் ரூபா பெறுமதியையுடை தலா இரண்டு ஆள் பிணையாளிகளை முற்படுத்த வேண்டும்.

சந்தேகநபர்கள் மூவரும் ஒவ்வொருவெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற அலுவலகத்தில் கையொப்பமிடவேண்டும். மூவரும் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கட்டளை வழங்கினார்.(ஐ)

# நாடாளுமன்ற அசம்பாவிதம்; உரிய விசாரணை வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஐ.தே.க.

கடந்த வாரம் நாடாளுமன்ற அமர்வில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் அவசியம் என ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளது.

4 ஆவது நாளாக நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வை அடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுகருத்து தெரிவித்தலக்ஷ்மன்கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்தத் தினத்தில் பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டமைமற்றும்சில உறுப்பினர்கள்தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை அவசியம். இதனைப் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறிக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் தாம்தெரியப்படுத்தநடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். – என்றார். (ஐ)

# தோல்வியை ஏற்றதால் சபாநாயகர் வரவில்லை

## கூறுகிறார் தினேஷ் குணவர்தன

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடையாது என்பதனை சபாநாயகர் கரு ஜயசூரிய ஒப்புக்கொள்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குக் கூடுதல் பெரும்பான்மை உண்டுஎன்பதைக்கரு ஜயசூரிய ஒப்புக்கொள்கின்றார்.

நாடாளுமன்றை எதிர்கொள்ள முடியாத காரணத்தினால் சபாநாயகர் கரு ஜயசூரிய அமர்வில் பங்கேற்கவில்லை.

பிரதமர் ஒருவரை நியமிக்கவோ அல்லது பதவி நீக்கவோ சபாநாயகருக்கு அதிகாரம் கிடையாது.

கட்சித் தலைவர் கூட்டத்தில் இதனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வலியுறுத்தியது. – என்றார். (ஐ)

# ‘கஜா’ புயலினால் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் மாவீரர் நாளன்று நடக்கும்

(எஸ்.நிதர்ஷன்)

‘கஜா’ புயலின் தாக்கம் காரணமாக வடக்கு மாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் அனைத்தும் திட்டமிட்டபடி எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறுமென மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயராசா அறிவித்துள்ளார்.

27 ஆம் திகதி நடைபெறுமெனஅவிக்கப்பட்டபரீட்சையை வேறு திகதியில் மாற்றுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தார் என வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட கஜா புயல் தாக்கம் காரணமாக அன்றையதினம் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அன்றையதினம் இடம்பெறவிருந்தபரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

இதனையடுத்து அந்தப் பரீட்சைகளை எதிர்வரும் 27 ஆம் திகதி நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் 27 ஆம் திகதி மாவீரர்தினம் என்பதால் அந்தப் பரீட்சைக்கான திகதிகளை மாற்றம் செய்யவேண்டுமென மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம் தொடர்பில் கல்விப் பணிப்பாளர் உதயராசாவிடம் கேட்ட போது –

பரீட்சைத் திகதியை மாற்றம் செய்யவேண்டுமென ஆளுநரிடம்நாம்கோரிக்கைமுன்வைத்ததாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை. அவ்வாறான கோரிக்கைகள் எதனையும் ஆளுநரிடம் முன்வைக்கவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் 27 ஆம் திகதி பரீட்சைகள் அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெறும். – என்றார். (ஐ-07)

# வனவிலங்குகள் போன்று செயற்பட்டனர் எம்.பிக்கள்

## சஜித் பிரேமதாஸ சாடல்

நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வனவிலங்குகளைப் போன்று செயற்பட்டனர் எனத் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

மன்னித்துக் கொள்ளுங்கள் நான் எனது கூற்றை வாபஸ் பெற்றுக் கொள்கின்றேன். காட்டு விலங்குகளை விடவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இழிவாகச் செயற்பட்டனர்.

மிருகங்களை இழிவுபடுத்த நான் விரும்பவில்லை. எனக்கு பெரும்பான்மைப் பலம் இல்லையென்றால் எவ்வித அச்சமும் இன்றி பதவியிலிருந்து விலகியிருப்பேன். – என்றார்.(ஐ)

# ‘பிரதமர் மஹிந்த’ என்று கூறியதால் அதிர்ந்த சபை

கொழும்பு, நவ. 20

பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்றுக் கூடிய நாடாளுமன்ற அமர்வு சற்றும் எதிர்பாராமல் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் நேற்றைய அமர்வின் ஆரம்பத்திலேயே நாடாளுமன்றம் ஒத்திவைப்பு தொடர்பான அறிவித்தலை பிரதிச் சபாநாயகர் வெளியிட்டபோது கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பிப் பெரும் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்துச் சிலருக்கு உரையாற்றுவதற்குப் பிரதிச் சபாநாயகர் அனுமதி வழங்கியிருந்தார்.

இதன்போது தினேஷ் குணவர்தன உரையாற்றுகையில் –

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் என ஆரம்பிக்கும்போது மஹிந்த, தினேஷ் குணவர்தனவுக்கு அருகில் வந்து அமர்ந்தார்.

இதன்போது ஏனைய உறுப்பினர்கள் பெரும் ஆரவாரம் செய்ததுடன், கூச்சலிட்டுக் கத்தினார்கள். தினேஷ் குணவர்தனவைப் பேசவிடாமல் கத்தினர்.

மஹிந்தவும், கூச்சலிடுபவர்களைப் பார்த்து சிரித்ததுடன், பதில் தெரிவித்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (ஐ)

# நடுநிலைமையான முறையில் நடக்கவேண்டும் சபாநாயகர்

## மஹிந்த அமரவீர கோரிக்கை



கொழும்பு, நவ. 20

சபாநாயகர் மிகவும் நடுநிலைமையான முறையில் செயற்படவேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிரிக்கெட் இறுதிப் போட்டியை எதிர்பார்த்து இருப்பது போன்று மக்கள் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறக் கூடியவைகளைக் காண்பதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் யார் இறுதிவரைதுடுப்பெடுத்தாடுகின்றார்கள், யார்ஆட்டமிழக்கின்றார்கள் என்பது தொடர்பில் மக்கள் மிகவும் விருப்பத்துடன் எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

நாடாளுமன்ற வரலாற்றில் நன்மதிப்பை இழந்த முதலாவது சபாநாயகர் கரு ஜயசூரிய. நாடாளுமன்றத்தில் இடம்பெறக் கூடியவைகளுக்குச் சபாநாயகரே பொறுப்புக்கூற வேண்டும்.

தற்போது நாடாளுமன்றத்தில் நிதானமாக இருக்க வேண்டியது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. சபாநாயகரே நிதானமாக இருக்க வேண்டும். – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எரிவதைப் பிடுங்க கொதிப்பது அடங்கும்

'தற்போதைய நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியே பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டது என்பது வெளிப்படையானது; தெட்டத் தெளிவானது.

அது, தனது முன்னணியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவையே ஏற்றிருக்கின்றது. அது மாத்திரமல்ல, நாட்டின் அண்மைக்கால அரசியல் குழப்பங்கள் , ரணிலின் தலைமைக்கு எதிரான நிறைவேற்று அதிகாரத்தின் எதேச்சாதிகாரமான பாய்ச்சல் ஆகியவற்றுக்கு மத்தியிலும், ரணிலின் தலைமை மீது சந்தேகத்துக்கும், ஐயத்துக்கும் இடமில்லாத வகையில் தொடர்ந்தும் தனது உறுதியான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் அது வெளிப்படுத்தி நிற்கின்றது.

ரணிலின் தலைமை மீதான – அல்லது அந்தத் தலைமைக்கு எதிரான – தாக்கங்கள், அழுத்தங்கள், நெருக்குவாரங்கள் போன்றவை நிறைவேற்று அதிகாரம் உட்பட்ட பல வெளித்தரப்புகளினாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட, மேற்கொள்ளப்பட, மறுபுறத்தில் ரணில் மீதான நம்பிக்கை, விசுவாசம், பற்றுறுதி போன்றவற்றை ஐ.தே.கட்சி உள்ளிட்ட ஐ.தே.முன்னணி தீவிரமாக அதிகரித்து, வெளிப்படுத்தி, உறுதியாக நிற்கின்றது என்பதுதான் இப்போது அவதானிக்கப்படும் விடயமாக இருக்கின்றது.

ஒக்டோபர் 26 ஆம்திகதி பிரதமர் பதவியை ஒருதலைப்பட்ச நடவடிக்கை மூலம் – எதேச்சாதிகாரச் செயற்பாடு வாயிலாக – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பறித்தபோது, ஐக்கிய தேசியக்கட்சி உள்ளடங்கலாக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் ரணிலுக்கு இருந்த ஆதரவுப்பலம், செல்வாக்கு, இப்போது – இந்த 25 நாள்களில் – இன்னும் அதிகரித்து உறுதியாகி இருக்கின்றதே தவிர குறையவில்லை என்பதுதான் நிஜம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் தூரதிருஷ்டி இல்லாத நடவடிக்கை ரணிலைக் கட்சிக்குள்ளும், அவரது கூட்டணிக்குள்ளும் பலமான தலைவராக – ஏக தலைவராக – உருவேற்றி, உசுப்பேற்றி, உயர்த்தி விட்டிருக்கின்றது என்பதுதான் நிலைமை.

நாடாளுமன்றப் பெரும்பான்மை ஐ.தே.க. தரப்பிடம். ஐ.தே.கவும் அதனை உள்ளடக்கிய ஐ.தே. முன்னணியும் தமது நாடாளுமன்றக் குழுத் தலைவரும் பிரதம வேட்பாளரும் ரணில்தான் – ரணில் மட்டும்தான் – என்பதில் உறுதியாக இருக்கின்றன.

ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட தரப்புக்கு– அதன் தலைமைக்கு – பிரதமர் பதவியை வழங்க மறுத்து நிற்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பிடிக்கவில்லை என்று அதற்கு ஒரு விநோதமான – விபரீதமான – காரணத்தையும் அவர் கூறுகின்றார்.

ரணிலைத் தமக்குப் பிடிக்கவில்லை என்பதால், இதுவரைத் தனக்குப்பிடிக்காதவராக – முழு எதிரியாக இருந்த – மஹிந்த ராஜபக்ஷவை சமரசம் செய்து, கூட்டிவந்து பிரதமராக்கி, அந்தப் பதவியில் தொடரச் செய்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி விடக்கூடாது என்பதற்காக, நாடாளுமன்றப் பெரும்பான்மையே இல்லாத மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் தொடர்வதற்கு – ஜனநாயக விரோத சூழல் நிலைமை நீடிப்பதற்கு – வழி சமைத்துக் கொடுத்துப் பார்த்திருக்கின்றார் அவர்.

ஒன்றுக்கு, மூன்று தடவைகள் நாடாளுமன்றத்தில் மஹிந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்பதை நிரூபித்துக் காட்டிய போதிலும் அவரைப் பதவியில் தொடரச் செய்வதில் உறுதிப்பட்டு நிற்கின்றார் மைத்திரியார்.

கடைசியாகப் பார்த்தது ஐ.தே.கட்சி, வேறு வழியின்றி, 'எரிவதைப் பிடுங்கினால், கொதிப்பது அடங்கும்' என்ற தத்துவப்படி செயற்பட முடிவு செய்துவிட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமராகச் செயற்படுவதற்காக அவரது பிரதமர் மற்றும் அதனோடு இணைந்த செயற்பாடுகளுக்கான நிதி வழங்கலை அடியோடு வெட்டி நிறுத்தும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தது.

அடுத்த பத்து நாள்களுக்குள் இது நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரும் என இப்போது கூறப்படுகின்றது. இந்தப் பிரேரணையையும் விவாதத்திற்கு வர விடுவார்களா? அதன் மீது விவாதம் நடத்துவதற்கும், அதை வாக்கெடுப்புக்கு விட்டு முடிவைத் தீர்மானிப்பதற்கும் அனுமதிப்பார்களா? அல்லது அதனையும் விவாதமின்றி நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்றப் பொலிஸாரின் சுற்றிவளைப்புக் காவல் கவசத்துடன்தான் நாட்டின் சபாநாயகர், நாடாளுமன்ற சபா பீடத்துக்கு வரவேண்டியிருக்குமா? அல்லது அதற்கு முன்னரே நாடாளுமன்ற சபாபீடம் இங்கு ஆட்சி என்ற பெயரில் அராஜகம் நடத்தும் குழுவினால் ஆக்கிரமிக்கப்பட்டுவிடுமா? – என்பனவற்றை எல்லாம் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், எரிவதைப் பிடுங்கக் கொதிப்பது அடங்குவது போல, இந்தப் பிரேரணையை நிறைவேற்றி சட்டவலிதாக்கினால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப் போவதைத் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இருக்கப் போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதி.

# திறமையான அதிகாரி இடமாற்றம் பொலிஸ்மா அதிபருக்கே வெட்கம்

## சாடுகின்றார் ஹரீன் பெர்ணான்டோ

கொழும்பு, நவ. 20

திறமையான அதிகாரியொருவரை இடமாற்றுவதுதொடர்பில் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர வெட்கப் படவேண்டுமென நாடாளுமன்றஉறுப்பினர்ஹரீன் பெர்ணான்டோதெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் –ஊடகவியலாளர்லசந்த விக்ரமதுங்க, கீத் நொயார் உள்ளிட்ட ஊடகவியலாளர்களைத் துன்புறுத்தியமை தொடர்பில், விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது கவலையளிக்கிறது.

அத்துடன் பல குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காகவே இவர் இடமாற்றப்பட்டுள்ளார்.

இந்தப்பொலிஸ்அதிகாரியின் இடமாற்றமானது அவரின் பாதுகாப்புத் தொடர்பில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது – என்றார். (ஐ)

# நறுவிலிக் குளத்தில் மழையிலும் தொடரும் தொல்பொருள் அகழ்வு

மன்னார், நவ. 20

மன்னார் நறுவிலிக்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகள் கடும் மழைக்கு மத்தியில் இடம் பெற்று வருகின்றன.

இந்த மைதானத்தில் தொல்பொருள் அகழ்வு ஆராய்ச் சிக்கு எனப் பத்து இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் நேற்று நான்காவது இடத்தில் அகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த அகழ்வுப் பணிகளின் போது இரண்டு அடி ஆழத்தின் கீழ் அதிகமாகப் பழங்காலத்து மட்பாண்டங்கள் கிடைப்பதோடு சீன கண்ணாடிக் குவளைத் துண்டுகள் , வளையல்கள் , போன்றவை கண்டெடுக்கப் பட்டுள்ளன என அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.



மன்னார் மாவட்டத்திற்கான நவீனவசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக நறுவிலிக்குளத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் கட்டுமானப் பணிகள் இடம் பெற்றுக்கொண்டிருந்தபோதுநிலத்தடியில் இருந்து அதிகமான மட்பாண்டங்கள் வெளிவந்தன.

இதனால் தொல்பொருள் திணைக்களம் இவ்விடம் தொல்பொருள் ஆராய்ச்சி செய்யப் படவேண்டும் என்று விளையாட்டு மைதான கட்டுமானப் பணிகளை இடை நிறுத்தி அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போரால் பாதிக்கப்பட்ட மக்களிடையே இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, நவ. 20

யுத்தம் நிறைவடைந்த பின்னர் மாறிய அரசுகளால் போரால் பாதிக்கப்பட்ட மக்களிடையே எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தம் நிறைவடைந்து ஒன்பது வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட எமது மக்களிடையே எந்த முன்னேற்றமும் இல்லை.

இந்தக் காலப்பகுதியில் மாறிய அரசுகள்கூட எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அக்கறை செலுத்தியிருக்கவில்லை.



தமிழ்த் தேசியப் போராட்டத்தை ஆதரித்த மக்களாக நாம் இருக்கின்றோம். ஆனாலும் இந்த ஆதரவானது ஓர் ஆயுதப் போராட்டத்துக்கு வழங்கப்பட்ட ஆதரவாக இருந்ததால் எமது மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடுமையாகப் போரினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு கட்டாயமாக அரசு அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை. இந்நிலையில் எமது எதிர்கால நடவடிக்கைகள் எமது இருப்புக் குறித்துச் சிந்தித்துச் செயற்படுபவையாக இருக்கவேண்டும் – என்றார். (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும். " *- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)*

## நாளை

21.11.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ. 6.38 வரை
திதி : திரயோதசி பி.ப. 1.30 வரை
சுபநேரம் : 4.40 – 6.10 வரை
இராகுகாலம் : 12.10 – 1.40 வரை

# 11 கோரிக்கைகளை மைத்திரியிடம் முன்வைத்துள்ளார் வியாழேந்திரன்

## அவரே நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்றேன். அரசியல் கைதிகளின் விடுதலை, காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட 11 கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.

– இவ்வாறு தெரிவித்தார் பிரதியமைச்சர் ச. வியாழேந்திரன்.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் வியாழேந்திரனிடம் நேற்றுக் காலை ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே வியாழேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

என்னைப் பொறுத்தவரை நாங்கள் கடந்த மூன்றரை வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட வரவு – செலவுத் திட்டங்களுக்கு ஆதரவாக நாங்கள் கைகளை உயர்த்தியுள்ளோம். இவ்வாறு சில பிரேரணைகளுக்கு எதிராகவும் நாங்கள் கரங்களை உயர்த்தியுள்ளோம்.

அதன் உச்சக்கட்டம் என்னவென்றால் ரணில் விக்கரம சிங்கவுக்கு எதிராகக் கொண்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எதிர்த்து வழங்கியுள்ளோம்.

இந்த மூன்றரை வருட காலத்தில் எமது மக்கள் ஒரு தேசிய ரீதியிலான இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை நோக்கிப் பயணிக்கும் வேளையிலே எமது மக்கள் எதிர்பார்த்த அரசியல் கைதிகள், காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட உடனடித் தேவைகளுக்கான தீர்வுகள் கூட கடந்த மூன்றரை வருட காலப் பகுதியில் இதுவரை எட்டப்படவில்லை.

இந் நிலையில் கடந்த ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுமாறு என்னை அழைத்தார்.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சுப் பதவியைப் பெறுப்பேற்றுள்ளேன்.

அதுமட்டுமன்றி நான் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றதுடன் அரசியல் கைதிகளின் விடுதலை, காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட 11 கோரிக்கைகளை ஜனாதிபதியிடத்தில் முன் வைத்துள்ளேன், அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.

இன்று(நேற்று) நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தின் போதும் பிரதமரிடத்தில் அந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்தினேன்.

அதுமாத்திரமின்றி நீதியமைச்சருடனும் 10 நிமிடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயத்தை எடுத்துரைத்துடன் நமல் ராஜபக்ஷவுடனும் இந்தக் கோரிக்கை சம்பந்தமாகப் பேசினேன்.

இந்த நோக்கத்திற்கமைவாகவே நான் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டேன். ஆகவே அந்த நோக்கத்தை நான் நிறைவேற்ற வேண்டும். – என்றார். (ஐ)

# ரணிலைக் கணக்கில் எடுக்காத மைத்திரி!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய சர்வகட்சிக் கூட்டத்தில், தான் பதவி நீக்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலட்சியம் செய்யும் வகையில் நடந்து கொண்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கட்சியின் மூத்த தலைவர்களுடன் இயல்பான முறையில் பேசினார்.

அவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். எனினும், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் பேசவில்லை.

ரணில் விக்கிரமசிங்க முன் வைத்த கருத்துக்களுக்கும் பதிலளிக்காமல் தவிர்த்துக் கொண்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, சர்வகட்சிக் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸவே ஐ.தே.க. தரப்பில் கலந்துகொள்வதாக இருந்தது.

எனினும், இறுதி நேரத்திலேயே ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பதாக முடிவு செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில், சஜித் பிரேமதாஸவும் கலந்து கொண்டார். (ஐ)

# வவுனியா நகர சபையின் ஊழியர்கள் போராட்டம்

வவுனியா, நவ. 20

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா, நகரசபை பொதுச் சுகாதார ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.



இலங்கை தேசிய அரச பொது ஊழியர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை இந்தப் போராட்டம் நடந்தது.

நேற்றுக் காலை 6.00 மணிக்கு இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடத்தப்பட்ட நிலையில் நகரசபையின் சில சுகாதாரத் தொழிலாளர்கள் கடமைக்கு சென்றிருந்தனர்.

நகரசபை வளாகத்தில் இருந்து சில ஊழியர்கள் கடமைக்காக வாகனங்களை எடுத்துச் செல்ல முற்பட்டபோது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் வாகனங்களை வெளியில் கொண்டு செல்ல முடியாதவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடனும்நகரசபைத்தலைவர், செயலாளருடனும் கலந்துரையாடினர்.

இதன் அடிப்படையில் சரியான தீர்வை நகரசபை வழங்கும் என்ற உறுதியைப் பொலிஸார் வழங்கியமையை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப் பட்டது. (ஐ)

# இந்த முறை தேர்தலில் வாக்குப்பதிவு குறையும்

கொழும்பு, நவ. 20

நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலை அடுத்து தேர்தல் ஒன்று நாட்டில் இடம்பெற்றால் வாக்குப் பதிவு மிகக் குறைவாகக் காணப்படலாம் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் நடைபெறும் தேர்தலில் இருந்து படிப்படியாக விலகி நிற்க ஆரம்பித்துள் ளதாகவும் பவ்ரல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டில் தற்போது இடம்பெறும் அரசியல் சூழ்நிலை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே, பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# வெளிநாட்டு இராஜதந்திரிகள் மைத்திரி, ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 20

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலர், நேற்று முன்தினம் இருதரப்புகளுடனும் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் முற்பகல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, அவரது செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

பின்னர், நேற்று முன்தினம் மாலை அந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழு, அலரி மாளிகைக்குச் சென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

இரண்டு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியாக – தற்போதைய அரசியல் நெருக்கடிகளை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருமாறு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக – இது இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ஐ)

# தீயில் கருகியது ஓட்டோ



கொழும்பு, நவ. 20

நுவரெலியா – கொட்டகலை பகுதியிலுள்ள வீடொன்றின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவை, இனந்தெரியாத சந்தேக நபர்கள் தீயிட்டு எரித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொட்டகலை – யதன்சைட் பகுதியில் வசிக்கும் தர்மராஜ் என்பவரின் ஓட்டோவே இவ்வாறு முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஓட்டோ உரிமையாளர் திம்புள்ள பத்தனை பொலிஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். அதன் அடிப்படையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள் ளனர். (ஐ)

# பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்ததில் உத்தரகாண்டில் 14 பேர் மரணம்



டேராடூன், நவ.20

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் பள்ளத்தாக்கு ஒன்றில், தனியார் பஸ் கவிழ்ந்து விழுந்த விபத்தில் 14பேர் உயிரிழந்தனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தரகாசியில் உள்ள ஜான்கி சாட்டியிலிருந்து விகாஸ் நகர் பகுதியை நோக்கி தனியார் பஸ் ஒன்று சென்றது.

அது. டாம்டா பகுதி அருகில் உள்ள பள்ளத்தாக்கு அருகே சென்றபோதுதிடீரெனபள்ளத்தாக்கில்கவிழ்ந்துவிபத்துக்குள்ளானது. தகவலறிந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் மேலும் 13 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

டேராடூனில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்தவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் மீட்புப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரகாண்ட் மாநில முதல் மந்திரி திரிவேந்திர சிங் ராவத் உத்தரவிட்டார்.

# 'தமிழீழம் பிறக்கிறது' நூலை அழிக்கும் நீதிமன்றத் தீர்ப்புக்குக் கடும் கண்டனம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விசனம் தெரிவிப்பு



சென்னை, நவ. 20

பழ.நெடுமாறனின் 'தமிழீழம் பிறக்கிறது' என்ற புத்தகத்தை சென்னை உயர் நீதிமன்றம் அழிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளமை கருத்துரிமையை நிராகரிப்பதாகும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இரா.முத்தரசன் நேற்று முன் தினம் (சனிக் கிழமை) வெளியிட்ட அறிக்கையில் –

'தமிழீழம் பிறக்கிறது' என்ற பழ.நெடுமாறனின் நூலை அழிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பைக் கண்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதிர்ச்சியடைந்தது.

'தமிழீழம்' என்ற கொள்கை நிலையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை; ஏற்கவில்லை. ஆனால், அந்தக் கருத்துள்ளவர்கள், தங்கள் நிலையை மக்களின் சிந்தனைக்கு வைப்பதற்குரிய, மறுக்க முடியாத உரிமை ஜனநாயக அரசியல் அமைப்பின் சாரமாக இருந்து வருகிறது.

எனவே, அத்தகைய ஜனநாயக உரிமையை, சிந்தித்துக் கருத்துகளை வெளிப்படுத்துகிற உரிமையை, மறுப்பது ஜனநாயக அடிப்படைகளை நிராகரிப்பதாகும். சென்னை உயர் நீதிமன்றமே 'கருத்துகளை' அழிக்க வேண்டும் என்ற தீர்ப்பை வழங்கியிருக்கின்றமை அரசியல் சாசன உள்ளடக்கத்தைக் காப்பாற்றுகின்ற அதன் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கிவிட்டது. இத்தகைய தீர்ப்பை உயர் நீதிமன்றம் மறுபரிசீலனை செய்து, பழ.நெடுமாறன் படைப்பு நூலை முழுமையாக அவருக்கு திரும்ப வழங்க வேண்டும். – என இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

# ஆண் நண்பர்களுடன் நாள் கணக்கில் அலைவது; பின் பலாத்காரம் செய்து விட்டனர் எனப் புலம்புவது!

## யுவதிகள் குறித்த சண்டீகர் முதல்வரின் கருத்தால் சர்ச்சை



ஆண் நண்பர்களுடன் நாள் கணக்கில் சுற்றித் திரிகிறார்கள். ஒரு நாள் திடீரென அவர்களுக்குள் சண்டை ஏற்படுகிறது. இதையடுத்து அந்த நபர் தன்னை பலாத்காரம் செய்துவிட்டதாக பெண்கள் புகார் கூறுகின்றனர் என்று கூறி பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார் சண்டீகர் முதல்வர்.

சண்டீகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அம்மாநில முதல்வர் கட்டார் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில் –

அண்மைக் காலமாக ஹரியானாவில் பலாத்காரச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனக் கூறப்படுவது தவறு.

பலாத்காரங்கள் முன்பு கூட நடந்தன. தற்போதும் நடக்கின்றன. இது மிகவும் கவலையளிக்கிறது. 80 முதல் 90 சதவீதம் பெண்கள் பலாத்காரம் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவது அவர்களுக்கு நன்கு அறிமுகமானவர்களால்தான்.

ஆண் நண்பர்களுடன் நாள் கணக்கில் சுற்றித் திரிகிறார்கள். ஒரு நாள் திடீரென அவர்களுக்குள் சண்டை ஏற்படுகிறது. இதையடுத்து அந்த நபர் தன்னைப் பலாத்காரம் செய்துவிட்டார் எனப் பெண்கள் முறைப்பாடு கூறுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்து மூலம் அவர் பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரன்தீப் சுரேஜ்வாலா கூறுகையில், பெண்கள் குறித்து முதல்வர் கூறிய கருத்து வருந்தத்தக்கது. இந்தக் கருத்து கட்டார் அரசு பெண்களுக்கு எதிரான மன நிலையைகொண்டதுஎன்பதையே வெளிப்படுத்துகிறது. பலாத்காரங்கள், கூட்டுப் பலாத்காரங்கள் போன்றவற்றை முழுவதுமாகத் தடுக்க முடியாத அரசு பெண்கள் மீது குற்றம் சொல்வது வருத்தத்துக்குரியதாகும் . – என்றார்.

இதுகுறித்து டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் கூறுகையில், ஒரு மாநில முதல்வரே இதுபோல் பேசினால் பெண்கள் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும்? பலாத்காரங்களை முதல்வர் நியாயப்படுத்துகிறார். இதனால்தான் ஹரியானாவில் பலாத்காரங்கள் அதிகரித்துள்ளன. பலாத்காரம் செய்பவர்கள் தண்டனையிலிருந்து தப்பி சுதந்திரமாகச் சுற்றி வருகின்றனர். – என்றார்.

# நின்ற லொறியுடன் அம்புலன்ஸ் மோதல் நோயாளி உட்பட 4 பேர் பரிதாபச் சாவு

## ஒசூர் அருகே நேற்று அதிகாலை சம்பவம்




தமிழ்நாடு ஒசூர் அருகே நேற்று முன்தினம் அதிகாலை அம்புலன்ஸ்வாகனம்ஒன்று விபத்துக்குள்ளானதில்மேல்சிகிச்சைக்காகச் சென்ற நோயாளி உட்பட 4 பேர் பரிதாபமாக பலியாகினர்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடியைச் சேர்ந்தவர் செல்வம் (43). இவருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந் நிலையில், மேல் சிகிச்சைக்காக அவரை பெங்களூரு நாராயணா ஹ்ருதயா மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உறவினர்கள் முடிவு செய்தனர். திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து அம்புலன்ஸ் வாகனத்தில் பெங்களூரு சென்றனர்.

அதிகாலை 4 மணியளவில் சீத்தாராம் மேடு எனும் பகுதியில் சென்றபோது சாலையோரம் நின்றிருந்த லாரியின் பின்புறத்தில் அம்புலன்ஸ் வாகனம் மோதியது.

இதில் அம்புலன்ஸில் இருந்த நோயாளி செல்வம் (43), அவரது மனைவி காந்திமதி (33), அவர்களது உறவினர் சரவணன் (26) மற்றும் அம்புலன்ஸ் உதவியாளர் மதன்குமார் (18) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். அம்புலன்ஸை ஓட்டிவந்த ஜெயசூர்யா (23) படுகாயங்களுடன் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கஜா தாக்கிய தமிழகப் பகுதிகளில் நிவாரண, மீட்புப் பணிகள் துரிதம்



கடந்த வாரம் வீசிய கஜா புயலில. தமிழகத்தில் சுமார் ஒருலட்சத்து 17 ஆயிரம் வீடுகள் சேதம் அடைந்து உள்ளன. இரண்டே கால் லட்சம் பேர் இன்னும் முகாம்களில் தவித்து வருகிறார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதப்படுத்த கூடுதலாக அமைச்சர்கள், அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

'கஜா' புயல் தாக்கியதில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டு உள்ளது.

சுழன்று அடித்த புயலுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 1 லட்சத்து 70 ஆயிரம் மரங்களும், 40 ஆயிரம் மின் கம்பங்களும் சாய்ந்தன. மேலும் சுமார் 350 மின்மாற்றிகளும் சேதம் அடைந்து உள்ளன. இதுதவிர 1 லட்சத்து 17 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்து இருக்கின்றன.

புயல் சேதத்தை மதிப்பிடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

புயலில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சமும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சமும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.25 ஆயிரமும் வழங்கப்படும் என்று மாநில முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து உள்ளார்.

இதேபோல் உயிர் இழந்த மாடுகளுக்கு தலா ரூ.30 ஆயிரமும், ஆடுகளுக்கு ரூ.3 ஆயிரமும் வழங்கப்படும் என்றும் அறிவித்து இருக்கிறார்.

புயலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சாய்ந்து கிடக்கும் மரங்களை அப்புறப்படுத்தும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளை மாற்றி அமைக்கும் பணியில் 12 ஆயிரத்து 500 மின்துறை பணியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

தற்போது பல்வேறு இடங்களில் உள்ள 493 நிவாரண முகாம்களில் 2 லட்சத்து 49 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

தொற்று நோய் பரவாமல் தடுக்க 372 மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் 1,014 நடமாடும் மருத்துவ முகாம்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று மீட்பு மற்றும் நிவாரண பணிகளை ஒருங்கிணைத்து துரிதப்படுத்த கூடுதலாக அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

# அடுத்த ஆண்டு ஏப்ரலுக்குள் தலிபான்களுடன் ஒப்பந்தம்

## அமெரிக்கா நம்பிக்கை



நியூயோர்க், நவ. 20

தலிபான் கிளர்ச்சியாளர்களுடன் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் சமாதான உடன்படிக்கை எட்டப்படுமென அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்காவின் சிறப்புத் தூதுவர் ஸல்மாய் கலிஸாத் இதனைக் கூறினார்.

காபூலில் தங்கியுள்ள அமெரிக்கச் சிறப்புத் தூதுவர், அமெரிக்கா, தலிபான்கள் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றார். ஆப்கானிஸ்தானில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக சமாதான உடன்படிக்கையை எட்டவுள்ளதாக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் பிறந்தவரான இந்த அமெரிக்கப் பிரதிநிதி இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், இந்தச் சமாதான உடன்படிக்கையானது வெற்றிகரமான ஆப்கானிஸ்தானை உருவாக்க வழிவகுக்கும். அத்தோடு, உள்நாட்டில் மட்டுமன்றிச் சர்வதேசத்திலும் அச்சுறுத்தல்கள் ஏற்படாது – என்றார்.

ஆப்கானிஸ்தானில் நீடிக்கும் 17 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பினால் கலிஸாத் சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டார். தலிபான்களுடன் நேரடி பேச்சில் ஈடுபடும் வகையிலேயே ட்ரம்ப் நிர்வாகத்தினால் அவர் நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, மேற்குலக ஆதரவு ஆப்கானிஸ்தான் அரசைத் தோற்கடிப்பதோடு, ஆப்கானில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு படைகளை வெளியேற்றும் முனைப்பில் தலிபான்கள் போரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த மாதம் அமெரிக்கத் தூதுவர் கலிஸாத்துடன் இடம்பெற்ற பேச்சின் போது, அமெரிக்கத் துருப்புக்களை மீளப்பெற தலிபான்கள் காலக்கெடு விதித்தனர். அத்தோடு, அமெரிக்கச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தலிபான் தலைவர்களை விடுவிக்கவேண்டுமென்ற நிபந்தனையையும் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐ

# ஆப்கான் படைகளின் தாக்குதலில் தளபதி உட்பட 8 தலிபான்கள் சாவு



ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்கின்றன என அறிவிக்கப்படுகிறது. அங்கு தலிபான்கள் ஆதிக்கம் முடிவுக்கு வந்த பாடில்லை. இரு தரப்புகளுக்கும் இடையில் மொஸ்கோவில் நடந்த சமரச பேச்சு முடிந்துள்ள நிலையில், அவர்கள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.

பார்யாப் மாகாணத்தில் தலிபான்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதியை இலக்காக வைத்து, ஆப்கானிஸ்தான் படைகள் சனியன்று வான் வழியாகக் குண்டு வீச்சு நடத்தின.

பஸ்த்தாங்கோட் மாவட்டத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் உள்ளூர் தளபதி ஒருவர் உள்பட 8 தலிபான்கள் பலியாகி உள்ளனர். 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலின்போது ஆப்கானிஸ்தான் படை வீரர்கள் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்தத் தகவல்களை ஆப்கானிஸ்தான் இராணுவ செய்தி தொடர்பாளர் முகமது ஹனிப் ரேசாய் தெரிவித்தார்.

அதே நேரத்தில் தலிபான்கள் தரப்பில் இருந்து எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

# பாகிஸ்தானுக்கு நிதி உதவி வேண்டி பல நாடுகளுக்கும் இம்ரான் பயணம்

## மத்திய கிழக்கும் சீனாவுக்கும் விஜயம்



அபுதாபி,நவ.20

20 ஆயிரம் கோடி டொலர் அளவுக்கு பொருளாதார சிக்கலில் தவிக்கும் பாகிஸ்தானுக்கு நிதி திரட்ட அந்நாட்டின் பிரதமர் இம்ரான் கான் ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக பொறுப்பேற்ற இம்ரான் கான் அந்நாடு ஏராளமான நிதிச்சுமையில் சிக்கி தவிப்பதாகத் தெரிவித்தார்.

உலக வங்கி, சர்வதேச நிதியம் மற்றும் சில நாடுகளிடம் இருந்து கடன் பெற்று, நலிவடைந்த பொருளாதார நிலையில் இருந்து நாட்டை முன்னேற்றுவதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வருகிறார். அரசு தரப்பில் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

சுமார் 20 ஆயிரம் கோடி டொலர்கள் அளவுக்கு நிதிச்சுமையில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் இந்த ஆண்டுக்கான அரசு செலவினங்களுக்கு மட்டும் 1200 கோடி டொலர்கள் நிதி தேவைப்படும் நிலையில் இம்ரான் கான் சவுதி அரேபியா நாட்டுக்கு சென்றார்.

பாகிஸ்தான் நாட்டுக்குக் கடனுதவியாக 600 கோடி டொலர்களை அளிக்க சவுதி அரசு முன்வந்துள்ளது.

இதேபோல் நிதி திரட்டும் நோக்கத்துடன் 4 நாள் பயணமாக கடந்த வாரம் சீனாவுக்கு சென்ற இம்ரான் கான், சீன பிரதமர் லீ கெகியாங் – ஐ சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பின் போது பாகிஸ்தானுக்கு சீனா 600 கோடி டொலர் நிதி உதவி வழங்க சீனா முன்வந்துள்ளது. இந்த வாரம் மலேசியாவுக்கு செல்லவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கு மேலும் சுமார் 600 கோடி டொலர்கள் நிதி திரட்டும் நோக்கத்தில் இம்ரான் கான் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்துக்கு சென்றுள்ளார்.

அவருடன் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி மெஹ்மூத் குரைஷி, நிதி மந்திரி அஸாத் உமர் ஆகியோரும் சென்றுள்ளனர்.

அபுதாபி நகரில் உள்ள அதிபர் மாளிகையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பட்டத்து இளவரசரும் அந்நாட்டின் முப்படைகளின் துணை தளபதியுமான ஷேக் முஹம்மது பின் சயித் – ஐ நேற்று அவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

# உருகுவே தூதரகத்தில் அடைக்கலம் கோருகிறார் பெரு முன்னாள் அதிபர்





ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி உள்ள பெரு முன்னாள் அதிபர் ஏலன் கார்ஸியா, தமது நாட்டில் உள்ள உருகுவே தூதரகத்தில் அடைக்கலம் கோரி உள்ளார்.

பிரேஸில் கட்டுமான பெரும் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் அளிக்க ஊழல் பெற்றார் என அவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறார் கார்ஸியா.

இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்கிறார் அவர். நாட்டைவிட்டு கார்ஸியா வெளியேற தடைசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து அவர் உருகுவே தூதரகத்தில் அடைக்கலம் கோரி உள்ளார்.

# வியட்நாமில் மழை; 13 பேர் உயிரிழப்பு!



ஹனோய், நவ. 20

வியட்நாமில் பெய்யும் அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவில் சிக்கிச் சுமார் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் நால்வர் காணாமல் போயுள்ளனர் என அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்நாமின் கான் ஹோவா பிராந்தியத்தில் கடந்த சில நாள்களாக பெய்த மழையால் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் குடியிருப்புகள் மற்றும் கட்டடங்கள் பல இடிந்து தரைமட்டமாகியுள்ளன. நிலச்சரிவில் சிக்கிய மேலும் பலர் காணாமல் போயுள்ள நிலையில், உயிரிழப்புகள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரவு காற்றின் வேகம் அதிகரித்து காணப்பட்டதாக வியட்நாம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வியட்நாமில் இயற்கை அனர்த்தங்களால் வருடாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர். இவ்வருடத்தில் மாத்திரம் இயற்கை அனர்த்தத்தால் இதுவரை 185 பேர் உயிரிந்துள்ளனர். கடந்த வருடம் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக சுமார் 389 பேர் உயிரிழந்தனர் என அந்நாட்டுப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir


# கேள்விக்குறியாகும் 'தமிழர்களின் பாதுகாப்பு'!



அண்மையில் ஏற்பட்ட சிறிலங்கா அரசியல் குழப்பத்தில்– அரசியல் கட்சிகள், ஆர்வலர்கள், புலம் பெயர்ந்த மக்கள், தமிழக இளையவர்கள், அனைத்துலக ஊடகங்கள் உள்ளிட்ட எல்லோர் மத்தியிலும் ஒரு பொதுவான கேள்வி எழுந்தது. அது என்னவெனில், சிறிலங்காவில் இனி வரும் காலங்களில் தமிழ் மக்களது நிலை என்ன, என்பதுதான்.

இந்தக் கேள்வி புதிய தொரு அரசியல் தெளிவை நாடி சென்றுள்ளது. அரசியல் யாப்பு மீறப்பட்டுள்ளது, மஹிந்த ராஜ பக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளார். தமிழர்கள் சார்பாக ஒரு நல்ல தலைமைத்துவம் இல்லை. தற்போது உள்ள மென்போக்கான தலைமைத்துவத்தில் பலருக்கும் நம்பிக்கை இருப்பதாக தெரியவில்லை .

அதேவேளை தமிழ் நாட்டிலும் கூட, தற்போது உள்ள ஆட்சித்தலைமை ஆளுமை நிறைந்த குணாதிசயங்களை கொண்டதாகத் தெரியவில்லை.

பூகோளத்தில், இலங்கைத்தீவு உலக கவனத்தை ஈர்க்கும் நிலையை அடைந்துள்ளது. இதன் காரணமாக சர்வதேச தலையீடுகள் அந்த தீவில் உள்ளன.

இந்த அரசியல் நிலையைப் புலம் பெயர்ந்த மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் எடுத்து செல்வதில் நவீன கால சர்வதேச ஊடகங்களும் சமூகத் தளங்களும் கணம் தவறாது செய்திகளைப் பரப்பி வருகின்றமை மிகவும் சுவாரஸ்யமானதாகும்.

**கொழும்பின் பக்கம் திரும்பிய கவனம்**

பல்வேறு சிறு சிறு நிகழ்வுகளையும் உள்நாட்டு அரசியலில் இருந்து திசை திருப்பும் நோக்குடன் ஒவ்வொரு ஒளிபரப்பு நிறுவனமும் செய்தியாகவும் விவாதமாகவும் நடத்தி வந்த நிலையில், அனைத்தையும் நிறுத்தி கொழும்பு அரசியலில் கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

சர்வதேச நாடுகளின் நாடாளுமன்றங்களிலும் கூட இந்த அரசியல் மாற்றம் முக்கிய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகள் மீண்டும் தமிழர்களின் நிவர்த்தி செய்யப்படாத அபிலாசைகள் மேசைமேல் எடுத்துப் போடப்பட்டவை போன்ற ஒரு எண்ணப்பாட்டை தோற்றுவித்துள்ளது.

புதிய பல இளம் ஆய்வாளர்கள் துணிவுடன் தமது எண்ணக் கருத்துகளை வெளிப்படையாக எடுத்தாள்வது வரவேற்கத்தக்கது. அதேபோல மூத்த ஆய்வாளர்கள் மதிப்பளிக்கப்பட்டு அவர்களது உளக்கிடைக்கைகளை வெளிப்படுத்தவும் அனுபவங்களை பாடமாக கொண்டு புதிய ஆய்வாளர்களுக்கு மூலோபாயப் பாதைகளை எடுத்துக்காட்டவும் இந்த சிறிலங்கா குளறுபடி ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**புதிய கூட்டுச் சிந்தனை**

அதற்கும் அடுத்து கூட்டு சிந்தனை ஒன்று முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில் பிறந்திருப்பதையும் இது காட்டுகிறது. தமிழ் நாட்டில் தமிழர்கள் மத்தியில் தமது மொழி, பண்பாடு குறித்த பாதுகாப்பு சிந்தனை எழுந்திருக்கும் அதேவேளை, ஈழத்தமிழர்கள் கடந்த எழுபது வருடங்களாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது குறித்த சிந்தனையும் எழுந்திருக்கிறது.

பிராந்திய அளவில் தெற்காசியாவில் தமிழின பாதுகாப்பும் அந்த இனம் தனது அடையாளத்தை தக்க வைத்து கொள்வதற்கும் ஆன புதிய ஒரு சிந்தனை ஓட்டம் இது எனத் தெரிகிறது . அதற்கான தேவையை புதிய தலைமுறை ஒன்று தனது கைகளில் எடுத்துச் செயலாற்றி வேண்டிய நிலையை உணர்ந்திருப்பது முக்கியமானதாகும்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காவி உடைக்கெதிராக எழுப்பிய அறைகூவலும் அனைத்தொடர்ந்து. சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது ஈழத்தமிழர்கள் அரசியல் பாதுகாப்பு குறித்த கவனமும் இங்கே குறிப்பிடத்தக்கவை.

**ஆட்சிக் கவிழ்ப்பு**

இரவோடு இரவாக அரங்கேறிய ஆட்சிக்கவிழ்ப்பு நாடகம் ஏற்கனவே கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழர்களை மீண்டும் நிம்மதியற்ற வாழ்கைக்கு இட்டு சென்றுள்ளதுடன் ஈழத்தில் தமிழர்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்தி உள்ளது குறித்து தனது கவலையை ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டிருந்தார்.

சிறிலங்காவில் புதிதாகத் தலைமை ஏற்றுள்ள ராஜபக்ஷ இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு, சீன ஆதரவு கொள்கையை கொண்டவர் என்ற பொதுவான ஒரு பார்வை சர்வதேச ஆய்வாளர்கள் மத்தியில் உள்ளது.

இத்தகைய சர்வதேச பார்வையின் மத்தியில் தமிழர் பாதுகாப்பு குறித்த புதிய விழிப்புணர்வின் பால் ஆர்வம் கொண்ட இளம் தலை முறையினர் தமது U TUBE தயாரிப்புகளில் அரசியல் வரலாற்றை மிக சிறிய சச்சரவாக குறுகிய காலஎல்லைக்குள் எழுந்த பிரச்சனையாக பார்க்க முனைவது கவனிக்கக்கூடியதாக உள்ளது.

உதாரணமாக 1987 ஆம் ஆண்டு இந்திய விமானப்படை விமானங்கள் சிறிலங்காவில் அத்துமீறி உணவுக்பொதிகளை போட்டதும், சிறிலங்காவின் இறையாண்மைக்கு மதிப்பளிக்காது இந்தியப் படையினர் வந்திறங்கியமையும் சிங்கள மக்களுக்கு இந்தியா மீது வெறுப்பு ஏற்பட காரணமாயிற்று என்று சில ஆய்வாளர்கள் காரணம் கற்பிக்கின்றனர்.

மேலும் சிலர் ராஜபக்ஷ அவர்களது ஆட்சிகாலத்தின் போது ஜெனீவா மனித உரிமை விவகாரத்தில் இந்தியா ஒத்துழைக்காமையே எனவும் இதனால் ராஜபக்ஷ இந்திய எதிர்ப்பு அரசியல் பிரச்சாரத்தை முடுக்கி விட்டுள்ளார் எனவும் காரணம் கற்பிக்க முனைகின்றனர்.

ஆனால் இத்தகைய தற்காலிக காரணங்களை, காரணம் காட்டுவதன் மூலம் தமிழர்களுக்கு இதை தவிர வேறு எந்த அரசியல் பிரச்சினையும் இல்லை என்று காட்ட எண்ணுவது சரியானதாக தெரியவில்லை.

சிங்கள, பௌத்த தேசியவாதம் என்பது இலங்கைத்தீவிலே பெரும்பான்மையாக இருக்கின்ற போதிலும், தெற்காசியாவில் தாம் சிறுபான்மையினர் என்ற குறுகிய மனோநிலையை கொண்டது.

இலங்கைத்தீவு அனைத்தையும் தனது ஆட்சிக்குள் வைத்து ஏனைய மத, மொழி, இனங்களை வெளியேற்றுவதன் மூலமே சிங்கள, பௌத்தம் பாதுகாப்பாக வாழ முடியும் என்ற மனப்பாங்கை கொண்டது.

தமிழினம் இலங்கையில் இந்தியாவுடன் இணைத்தே பார்க்கப்படுகிறது. இலங்கையில் தமிழர்கள் தமிழ் நாட்டின் மொழி, கலாச்சார தொடர்ச்சியை கொண்டவர்களாக இருப்பதால், தமிழர்கள், சிங்கள பௌத்தத்தை அழித்து விட கூடிய சக்தியாகப் பார்க்கப்படுகின்றனர்.

**தேரவாத பௌத்தம்**

சிங்கள பௌத்தம், தேரவாத பௌத்த சிந்தனைகளை பின்பற்றும் ஒரு மதமாகும். தேரவாத பௌத்தம் பல சங்கங்களையும், நிக்காய என்று கூறக்கூடிய தேரர்களின் தனித்துவமான அமைப்புகளையும் தனது சமயத் தலைமையாக கொண்டிருக்கிறது.

தேரவாத பௌத்தசிந்தனையின் படி தேரோக்கள் சாதாரண சிங்கள குடிமக்களின் சிந்தனை உருவாக்கத்தில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றனர். மொழி, பண்பாடு, பாதுகாப்பு போன்றவற்றை முன்னிலைப்படுத்தி அரசியல் ஆட்சி அதிகாரத்தில் அதிக செல்வாக்கு கொண்டவர்களாக தேரர்கள் திகழ்கின்றனர்.

**இந்தியாவுக்கு மாற்றான போக்கு**

ஆக சிறிலங்கா ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற சிந்தனையும் இந்தியா, சிங்கள பௌத்தத்திற்கு எப்பொழுதும் ஆபத்தானது என்ற சிந்தனையும் சிங்கள மக்கள் மத்தியில் வேரூன்றி உள்ளன.

இந்தப் பின்புலத்தில் இந்தியாவுடன் என்றும் நண்பனாக இருப்பது போல் வெளித்தோற்றத்திற்கு காட்டிகொண்டாலும் தெற்காசியாவில் பெரிய நாடான இந்தியாவின் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு ஏற்பாடுகளின் பலனாக ஏற்படக்கூடிய தாக்கங்களில் இருந்துதன்னை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா எப்பொழுதும் கவனம் செலுத்தி வருகிறது.

தெற்காசிய பிராந்தியத்திலேயே இந்தியாவிலிருந்து தன்னை பாதுகாத்து கொள்வதன் பொருட்டு இந்தியாவின் வளர்ச்சிக்கும், அதன் பாதுகாப்பு முக்கியத்துவத்திற்கும் சவாலாக இருக்கக்கூடிய வல்லரசுகளுடன் துணைநிற்கும் வெளியுறவுக் கொள்கையை வகுத்துக் கொள்வதில் சிறிலங்கா என்றும் முனைப்புடன் செயற்பட்டு வந்துள்ளது.

அதன் பூகோள நிலை முக்கியத்துவத்தின் காரணமாக சிறிலங்கா – வகுத்துக் கொள்ளும் வெளியுறவுக் கொள்கைகளுக்கு இந்தியாவின் போட்டி வல்லரசுகள் மத்தியில் எப்பொழுதும் அதிக வரவேற்பு பெறுவது கவனிக்கத்தக்கதாகும்.

இருந்த போதிலும் சிங்கள தேசம் தன்னை இந்தியாவின் நேரடி எதிர்ப்பு தன்மை கொண்ட நாடாக என்றும் வெளிக்காட்டி கொண்டது கிடையாது. பதிலாக சர்வதேச இராஜதந்திர நெறி முறைகளின் படி நாடுகளின் இறையாண்மையை தனது கவசமான முன்நிறுத்தி இந்தியாவை கையாளுகிறது.

2009ஆம்ஆண்டில்பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சிறிலங்கா அரச படைகளால் கொன்றொழிக்கப்பட்ட போதிலும் தமிழ் நாட்டு மக்களின் எந்தவித கொந்தளிப்பும் எடுபடாத வகையில் செய்யப்பட்டது, மத்திய அரசின் ஊடாக இறையாண்மையின் பெயரால் கையாள கூடிய பலமே இது எனலாம்.

இந்தியாவை தனது பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்க கூடிய நாடாக எண்ணுகின்ற போதிலும் இந்தியாவிற்குள்ளேயே ஒருசில அலகுகளை தெரிந்தெடுத்து சிறிலங்கா தனது நட்புக் கைகளாகப் பயன்படுத்துகிறது.

இவற்றில் அடிப்படை திராவிட – ஆரிய இன கோட்பாட்டு வேறுபாட்டையும், பிராமணீயம் – நாஸ்திக சுயமரியாதை கோட்பாட்டு வேறுபாடுகளையும், இந்திய அரசியல் கட்சி வேறுபாடுகளையும் பௌத்த சிங்களம் நேரம் காலம் அறிந்து தேவைக்கு ஏற்றாற்போல் பயன்படுத்துகிறது.

நேரகாலத்திற்கு ஏற்றவகையில் பேசும் விவகாரத்தில் செய்தி தகவல் காரணிகளை மாற்றி அமைத்தும் வரலாற்றினை திரிபுபடுத்தியும் நுண்ணிய யுக்திகளாக கையாளும் விதத்தில் கொழும்பு இராஜதந்திரம் இதுவரை காலமும் இந்திய – இலங்கை உறவு விவகாரத்தில் வெற்றியே கண்டு வந்துள்ளது.

**பௌத்த, சிங்கள தேசியவாதமும்**

சிறிலங்காவில் ஆட்சிக்கு வரும் எந்த அரசியல் கட்சியும் பௌத்த சிங்கள தேசியவாதத்தின் செல்வாக்கின் பேரிலேயே ஆட்சி செய்ய முடியும் என்றவகையில் , பௌத்த சிங்கள தேசியவாதத்தின் பாதுகாப்பும், இந்திய எதிர்ப்புமே அடிப்படை சிறிலங்காவின் நகர்வாக இருக்கும் என்பதில் இங்கே சந்தேகம் எதுவும் இல்லை.

பொருளாதார நலன் என்பதை மையமாக வைத்து பார்த்தாலும் அதீத கடன் பளுவின் பின்விளைவுகளை எதிர் நோக்க வேண்டும் என்ற கோட்பாட்டை தெரிந்து கொள்ளாத ஒரு அரசா சிறிலங்கா என்ற கேள்வி எழுகிறது.

சீனாவிடம் அதிக கடன் பெற்று கொண்டதே இந்தியாவின் பிராந்திய வட்டத்திற்குள் வைத்து பேரம் பேசி கொள்ளலாம் என்ற துணிவுடனேயே என்பதை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த காலத்தில் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களிடமும் மேலைநாடுகளிடமும் வாங்கிய அதிக தொகை கடன்கள் யாவும் விடுதலைப் புலிகளை அழிக்கும் யுத்தத்தில் முடிவடைந்ததாகவும், சீனாவின் பலம் சிறிலங்காவில் அதிகரிப்பதை தடுக்க வேண்டிய நிலையையும் முன்நிறுத்தி கடன் தொகைகளில் இருந்து தன்னை விடுவித்து கொண்ட அனுபவம் ஏற்கனவே சிறிலங்காவுடன் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆக இன்று இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பிற்கு சவாலாக சீனாவின் நகர்வுகளை சிறிலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்த இரண்டு அரசாங்கம்களுமே தெரிந்து கொண்டே ஏற்றுக் கொண்டு உள்வாங்கி உள்ளன. இதனை இந்திய மத்திய அரசு தடுத்துவிட முடியாது என்பதை கண்கூடாக கண்டு வருகிறோம்.

அது பாரதீய ஜனதா கட்சி யாக இருந்தாலும் சரி அகில இந்திய காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, சிறிலங்கா தனது சிங்கள தேசியவாத பாதுகாப்பு சிந்தனையிலிருந்து விலகியதாக தெரியவில்லை

இந்த நகர்வுகளை இந்திய அரசின் நட்பு கைகளான நாடாளுமன்ற உயர் சபை உறுப்பினர் சுப்ரமணியன் சுவாமி போன்றவர்களால் கூட கையாள முடியவில்லை என்பது முக்கியமானது.

2015 ஆம் ஆண்டு வரை சிறிலங்கா அரசாங்கத்தை நடத்திய மஹிந்த ராஜபக்ஷவின் நண்பராக இருந்தவர் சுப்ரமணியன் சுவாமி. அந்த காலப்பகுதியிலே கொழும்பில் திறந்த வாகனத்தில் வெளிப்படை யாக உலா வரக்கூடிய ஒரே ஒரு இந்திய அரசியல் தலைவர் என பெயர் பெற்றவர் அவர்.

சிறிலங்காவின் யுத்த வெற்றி பரப்புரை கூட்டங்களில் எல்லாம் பங்குபற்றி உரையாற்றியவர். இவர் கூட மஹிந்த ராஜபக்ஷவின் சீன சார்பு நிலையை மாற்ற முடியவில்லை என்பது இந்திய ஆளும் இந்து மேலாதிக்க வாதம் சிங்கள பௌத்தத்திடம் தோற்று விட்டதோ என்ற கேள்வியை எழுப்புகிறது .

இந்த நிலையை நோக்கிய சிந்தனை சிறிலங்காவை கைக்குள் கொண்டு வருவதற்கு இந்தியா படும் அவஸ்தையை வைத்தே எடுத்து கொள்ளப்படுகிறது. தமிழர்களின் அழுத்த பலம் குறைந்ததும் சிறிலங்காவுக்கு இந்தியாவின் தேவை அற்ற நிலையையே இது எடுத்து காட்டுகிறது.

இந்த வகையில் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து புதிய சிந்தனைகள் எழுவது சரியானதாகவே தெரிகிறது. அரசியல் கட்சிகளின் செல்வாக்குகளுக்கு அப்பால் அரசுகளின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் தனித்துவமான தமிழர் பாதுகாப்பு குறித்து சிந்திக்க வேண்டிய தேவையை இது வெளிப்படையாக உணர்த்துகிறது.

- புதினப் பலகைக்காக

லண்டனிலிருந்து லோகன் பரமசாமி

# மைத்திரிபாலவுக்கு எதிராக வறுகிறது குற்றப் பிரேரணை

## ஐக்கிய தேசிய முன்னணி நடவடிக்கை

நாடாளுமன்றத்தின் பெரும் பான்மையை ஏற்றுக் கொள்ளா மல், அரசமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைக ளைச் சவாலுக்குட்படுத்தும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கு எதிராகக் குற்ற விசார ணைப் பிரேரணையை கொண்டு வருவ தற்கு, ஐக்கிய தேசிய முன்னணி நடவடிக்கை எடுத் துள்ளதாகத் தகவல் வெளி யாகியுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேர ணைகள் மூலமாகத் தோற்கடிக் கப்பட்ட நபரை, பிரதமராக ஏற்றுக்கொள்வது அரசமைப் புக்கு முரணானது என்பதால், ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த முன்னணி அறிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, ஒரு பொறுப்புமிக்க அரசியல்வாதி என்றால், நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாக இரண்டு தடவைகளும், தன்னு டைய உரையின் ஊடாக ஒரு தடவையும் தோற்கடிக் கப்பட்டதை ஏற்றுக்கொண்டு, பிரதமர் பதவியிலிருந்து உடனடியாக விலகிக்கொள்ள வேண்டும் என்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

நாடாளுமன்றத்தைத் தொடர்ச்சியாக நிலைகுலையைச் செய்தமை, மோசடியான ஆவணங்கள் தயாரித்தல் உள்ளிட்ட இன்னும் பல கார ணங்களை அடிப்படையா கக் கொண்டு, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக நம் பிக்கையில்லாப் பிரேரணை யொன்றை கொண்டுவரு வதற்கு, அரசதரப்பு எம்.பிக்கள், பலர் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, தன்னிடம் சமர்ப்பிக்கப்படாத நம்பிக்கை யில்லாப் பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பை நடத்தி, மக்க ளின் இறைமையைக் குறைத்து மதிப்பிட்டமை, கணக்கெடுக் காமல் உறுப்பினர்களின் வாக்குகளின் எண்ணிக்கையை அறிவித்தமை உள்ளிட்ட கார ணங்களை அடிப்படையாகக் கொண்டே, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு கலந்துரையா டப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் ஸ்திரமற்ற நிலைமை ஜனநாயகத்துக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் வகை யில் அமைந்துள்ளது. இந்நிலையில், இவ்வாறான நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், அதன் முதலாவது செயற்பாடாக, சபா நாயகருக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரு வதற்கு ஆராயப் படுகின்றது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# கொழும்பில் மீண்டும் மக்களை கூட்ட அரச தரப்பினர் முயற்சி

புதிய அரசுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அடுத்த மாதம் ஆரம்பத்தில் மீண்டும் மக்களைக் கொழும் பில் ஒன்று கூட்ட அரச தரப்புக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவின் தலைமையில் பிரதமர் செயலகத்தில் இடம்பெற்ற அரச தரப்புநாடாளுமன்றஉறுப்பினர் கள் கூட்டத்தில் இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் மாவட்ட மட்டத்தில் கூட்டங்களை நடத்தவும் நடவ டிக்கை எடுத்துள்ளதாக அரச தரப்பு சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரங்களைச் சர்வ தேசத்துக்குவிளக்கும்வகையில் அமைச்சர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ள தாகவும் அவர்மேலும் கூறினார். (ஐ)

# வடக்கில் கன மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

வடக்கு மாகாணத்தில் கன மழைபெய்யும்என்று வானிலை ஆய்வாளர்கள் எதிர்வு கூறி யுள்ளனர்.

வங்கக் கடலில் உருவாகி யுள்ள காற்றழுத்த தாழ்வு மண் டலம் இலங்கையின் தென்கிழக் குத் திசையிலிருந்து வடக்கு நோக்கிநகர்வதால் நேற்று முன் தினம் இரவு தொடக்கம் 48 மணித்தியாலங்களுக்கு மழை யுடனான காலநிலை நீடிக்கும் என்று அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

வடக்கில் 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் என்ப துடன் நாட்டின் ஏனைய மாவட் டங்களில் 100 மில்லிமீற்றர் மழையும் பதிவாகும் என்று வளிமண்டலவியல் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், காற்றின் வேகம் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காணப் படும் என்றும் வளிமண்டலவி யல்திணைக்களம்தெரிவித்துள் ளது. (ஐ)

# பதவி விலக நிபந்தனை விதித்தாராம் மஹிந்தர்

கொழும்பு, நவ. 20

பிரதமர் பதவியில் இருந்து விலகுவதற்கு, மஹிந்த ராஜ பக்ஷ, நேற்று முன் தினம் நடந்த சர்வகட்சிக் கூட்டத்தில் நிபந் தனை விதித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி தரப்பு, தாம் இரண்டு முறை நம்பிக்கையில் லாப் பிரேரணை நிறைவேற்றிய பின்னரும், மஹிந்த ராஜபக் ஷவின் தலைமையிலான அரசு இனிமேல் பதவியில் இருக்க முடியாது என்று வலியுறுத்தி யது.

அதற்கு மஹிந்த ராஜபக்ஷ, எந்த நேரத்திலும் பிரதமர் பதவியில் இருந்து விலகத் தயாராக இருப்பதாகவும், ஆனால், தனக்கும் தனது அரசுக்கும் எதிராக ஐ.தே.க. முறைப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யில் கையெழுத்திட்ட பல உறுப் பினர்கள், அந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, கடைசி நேரத்தில் பின் வாங்கியிருந்தனர்.

எனவே, நாடாளுமன்றத்தில் ஒரு கட்சிக்குப் பெரும்பான்மை உள்ளது என்பதை, வெறும் கையெழுத்து ஆவணம் மூலம் ஏற்றுக் கொள்ள முடியாது.

நாடாளுமன்ற நடை முறை கள் பின்பற்றப்படுவதற்கு எல் லாக் கட்சிகளும் தனக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ கோரியுள் ளார். (ஐ)

# வடக்கில் டெங்கு அபாயம் வைரஸ் காய்ச்சலும் பரவல்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 20

வடக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் அதிகரித்துள்ளன என்று சுகா தார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், நாட்டின் பல மாவட்டங்களில் இன்புலுவன்ச வைரஸ் காய்ச்சல் பரவுவ தாகவும் அமைச்சு சுட்டிக்காட் டியுள்ளது.

இடைவிடா காய்ச்சல், இருமல், வாந்தியெடுத்தல் மற் றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் உடனடியாக மருத் துவரின் சோதனையைப் பெறு மாறு ஆலோசனை வழங் கியுள்ள சுகாதார அமைச்சு, குழந்தைகளின் ஆரோக்கி யத்தில் மிகக் கவனமாக இருக்குமாறும் கேட்டுள்ளது.

வடக்கு மற்றும் மேல் மாகா ணத்தில் நீடிக்கும் மழையு டனான காலநிலை காரணமாக டெங்கு நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன. அந்த மாகாணங்களில் டெங்கு நோய்த் தொற்று அபாயம் அதி கரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது. வருடத்தின் பதி னொராவது மாதமான இது வரையான காலப்பகுதியில் நாடுமுழுவதும் 42 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடு கையில் இது குறைவான எண்ணிக்கை என்ற போதும் அதன் தாக்கம் தற்போது அதி கரித்துள்ளது என்று டெங்கு நுளம்பு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் சிறப்பு மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்தார். (ஐ)

# ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய சின்னமாக வைரக்கல்



கொழும்பு, நவ. 20

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஒரு புதிய சின்னத்தின் கீழ் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும், அதன்படி வைரக்கல் சின்னத் தில் போட்டியிட கூட்டணியினர் முடிவெடுத்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கையைத் தற் போது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மூத்த உறுப்பி னர்கள்யானைச்சின்னத்துக்குப் பதிலாக ஒரு புதிய சின்னத்தின் கீழ் ஒரு கூட்டணியாகத் தேர்த லில் போட்டியிட வேண்டும் எனத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் சின்னம் தொடர்பில் கட்சிக்குள் இரு தரப்பட்ட கருத்துக்கள் நிலவி னாலும், தற்போது வைரக்கல் சின்னத்தில் போட்டியிடக் கூட்டணியினர் சம்மதம் தெரி வித்துள்ளனர எனவும் தகவல் கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# எம்.பிக்கள் சிலரின் உயிர் போகலாம்!

## மஹிந்த அமரவீர எச்சரிக்கை



தற்போது நாடாளுமன் றத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களினால், நாடாளும ன்ற உறுப்பினர்கள் சிலர் உயிரிழப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளனஎன அமைச்சர்மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நிலமைக்கு சபா நாயகரே முக்கிய காரணம் எனவும்அவர்மேலும்கூறினார்.

அமைச்சரவையை அல்லது பிரதமரை நியமிக்கவோ, அரசைக் கலைக்கவோ சபா நாயகருக்கு அதிகாரம் இல்லை எனவும் அரசமைப்பின் அடிப் படையில் ஜனாதிபதிக்கே அதற்கான அதிகாரம் இருப் பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் என்பவர் நடுநிலையானவராகவும் பக் கச்சார்பற்றவராகவும் இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி யின் தீர்மானங்களை அவரால் விமர்சிக்க முடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித் தார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கையில் தமது இரசிகர்களிடம் மன்னிப்பு கோரிய இங்கிலாந்து வீரர்




இங்கிலாந்து ரசிகர்கள் முன்பதிவு செய்திருந்த அறையைக் கிரிக்கெட் வீரர்கள் எடுத்துக்கொண்டதற்காக இங்கிலாந்து அணியின் கப்டன் ஜோ ரூட் ரசிகர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

இலங்கையின் கண்டி நகரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியைக் காண்பதற்காக, இங்கிலாந்தைச் சேர்ந்த ரசிகர்கள் 100 பேர் மைதானத்திற்கு அருகாமையில் உள்ள இயர்ல்ஸ் ரெஜென்சி ஹோட்டலில் பல மாதங்களுக்கு முன்னரே அறைகளை முன்பதிவு செய்திருந்தனர்.

ஆனால் இலங்கை கிரிக்கெட் சபை போட்டி ஆரம்பமாக உள்ள சில நாள்களுக்கு முன்னர், இலங்கை, இங்கிலாந்து வீரர்கள் தங்குவதற்காக அந்த ஹோட்டல் அறைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டது. வேறு யாரையும் தங்க அனுமதிக்கவில்லை.

முன்பதிவு செய்திருந்த ரசிகர்கள் 100 பேரின் பணத்தையும் திரும்ப கொடுத்து கண்டியில் இருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் அறை ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் இங்கிலாந்து ரசிகர்கள் பலரும், இலங்கை கிரிக்கெட் சபையின் மீது கடும் கோபமடைந்து சமூகவலைத்தளத்தில் விமர்சிக்க ஆரம்பித்தனர்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து, சம்பவம் குறித்து இங்கிலாந்து வீரர்கள் பெரிதும் வருத்தமடைந்துள்ளனர்.

மேலும் ஆட்டத்தின் இடைவேளையின்போது இங்கிலாந்து ரசிகர்கள் 100 பேரையும் நேரில் சந்தித்து மன்னிப்புக் கோரியுள்ளனர்.

அதோடு நில்லாமல் இங்கிலாந்து அணியின் கேப்டன் ஜோ ரூட், 100 பேரையும் தனித்தனியாகச் சந்தித்து கையில் மன்னிப்புக் கடிதம் கொடுத்து தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

இதனை பாராட்டும் விதமாக இந்திய அணியின் துணை கேப்டன் ரோகித்சர்மா தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில், உங்களின் செயலை பாராட்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த 2001ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின்போது, இலங்கை ரசிகர்களுக்கு ஒரு விலையிலும், இங்கிலாந்து ரசிகர்களுக்கு அதிகமான விலையிலும் ரிக்கெட்டுகளை விற்பனை செய்து, இலங்கை கிரிக்கெட் சபை சர்ச்சையில் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

# கோஹ்லி விடுத்த எச்சரிக்கை




ஆஸ்திரேலிய அணி முன்பு போல வம்பிழுக்காமல் இருந்தால் சரி என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி கூறினார்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இந்தியாவில் இருந்து புறப்பட்டது.

பயணத்துக்கு முன்னர் பேட்டியளித்த கோஹ்லி, நாங்கள் எந்த பிரச்சினையும் ஆரம்பிக்க மாட்டோம். ஆனால் அவர்கள் எதையும் தொடங்காமல் இருக்கவேண்டும்.

ஆஸ்திரேலிய அணி முன்பு போல வம்பிழுக்காமல் இருந்தால் சரி.

நான் இளம் வயதில் முதிர்ச்சியற்ற சில விடயங்களைச் செய்தேன். ஆனால், இப்போது கப்டனாக அணி வீரர்களின் தேவையைத் தாண்டி யோசிக்க எனக்கு நேரமில்லை.

அதே சமயம் திருப்பி அடிக்கவும் தயங்க மாட்டோம், நாங்கள் எப்போதும் திருப்பிக் கொடுக்கும் பழக்கம் உடையவர்கள் எனக் கூறினார்.

கோஹ்லி இதற்கு முன் ஆஸ்திரேலியா சென்றபோது எல்லாம் பஞ்சாயத்தைக் கூட்டி விடுவார். ஒரு முறை அந்நாட்டு ரசிகர்களை பார்த்து மோசமான சைகை காட்டினார் என்ற பிரச்சினை எழுந்தது.

அடுத்து ஸ்டீவ் ஸ்மித்துடன் மோதல் போக்கை கோஹ்லி கடைப்பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டோனியின் பெரிய ஆசையே இதுதான்



இந்திய அணியின் வெற்றிக் கப்டன் என்றழைக்கப்படும் டோனியின் ஆசை, அடுத்தாண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடர் தான் என்று அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் கூறியுள்ளார்.

டோனி கிட்டத்தட்ட தன் சர்வதேச கிரிக்கெட் வாழ்வின் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளார் என்றே கூறலாம். ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான ரி-20 தொடரில் அதிரடியாக நீக்கப்பட்ட டோனிக்கு பதிலாக, இளம் வீரர் ரிப் பந்த் சேர்க்கப்பட்டார்.

ரி-20 போட்டியிலிருந்து டோனி நீக்கப்பட்டுள்ளதால், விரைவில் அவர் தன் ஓய்வை அறிவித்துவிடுவார் என்று ரசிகர்கள் பலரும் கவலையில் உள்ளனர்.


ஆனால் இந்திய அணியின் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி நிச்சயமாக டோனி இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவார் என்று கூறி வருகிறார்.

இந்நிலையில் டோனியின் நெருங்கிய நண்பரும் விளம்பர நிறுவனமான ரிதி ஸ்போர்ட்ஸ் இயக்குனருமான அருண் பாண்டே ஒரு விடயத்தைக் கூறியுள்ளார்.

அதில், ஒரு நாள் போட்டிகளில் தன் கப்டன் பதவியில் இருந்து விலகியபோது இருந்து டோனியின் ஒரே கனவு அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்னக் கிரிக்கெட் தொடரில் ஆடுவது தான். அதில் அணியின் ஆலோசகராகவும் இருப்பார் எனவும் கூறியுள்ளார்.

அவர் கோஹ்லிக்கு நேரம் கொடுத்து கப்டன் பதவியில் வளர இடம் அளித்தார். அவரது எண்ணத்தில் இப்போதும் எந்த மாற்றமும் இல்லை என கூறியுள்ளார்.

# அரையிறுதியில் போர்த்துக்கல்




ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசங்களுக்கான லீக் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு போர்த்துக்கல் தகுதி பெற்றுள்ளது.

இத்தாலியில் இலங்கை நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற இத்தாலியுடனான குழு ஏ3 போட்டியொன்றை 0-0 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடித்துக் கொண்டமையையடுத்தே இந்தக் குழுவில் முதலிடம் பெற்றதுடன் அரையிறுதிப் போட்டிக்கும் போர்த்துக்கல் தகுதி பெற்றது.

# 227 ஓட்டங்களுக்குள் சுருண்ட பாகிஸ்தான்



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில், பாகிஸ்தான் அணி 227 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் தொடங்கியது. முதல் டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டம் செய்து 153 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அதிகபட்சமாக கேன் வில்லியம்சன் 63 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் யாசிர் ா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பின்னர் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது.

தொடக்க வீரர் இமாம் உல் ஹக் 6 ஓட்டங்களிலும், டிரெண்ட் போல்டின் அபார பந்துவீச்சில் முகமது ஹபீஸ் 20 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த அசார் அலியையும் 22 ஓட்டங்களில் போல்ட் வெளியேற்றினார்.

அதன் பின்னர் ஹரிஸ் சோகைல்(38), அசாத் பிக்(43) ஓரளவு நல்ல ஸ்கோர் எடுத்து அவுட் ஆகினர். இதனைத் தொடர்ந்து, பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால் 227 ஓட்டங்களுக்கு ஆல் – அவுட் ஆனது.

பாபர் அசாம் 62 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் டிரெண்ட் போல்ட் 4 விக்கெட்டுகளையும், கிராண்ட்ஹோம் மற்றும் அஜஸ் படேல் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்நிலையில், 74 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் நியூசிலாந்து அணி, 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 22.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 56 ஓட்டங்கள் எடுத்தது. ஜீத் ராவல் 26 ஓட்டங்களுடனும், கேன் வில்லியம்சன் 27 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

## மஹிந்தவை முடக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முன்வைத்தது.

அத்துடன் இந்தப் பிரேரணையை ஐ.தே.கவின் ரவி கருணாநாயக்க தலைமையிலான ஆறு எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளித்தனர்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, எதிர்வரும் 29ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசநிதி ஒதுக்கீடுகளை நாடாளுமன்றமே கட்டுப்படுத்துகிறது. அந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் செயலகம் மற்றும் பணியாளர்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை இடைநிறுத்தும் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம், தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நடவடிக்கை மஹிந்த ராஜபக்ஷ அரசுக்குப் புதிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற வளாகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவின் அரசும் அதன் அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் நிழல் அமைச்சர்கள் ஆவர். இவர்களின் முழு நேரத் தொழில் இன்று நாடாளுமன்றத்தில் மிளகாய்ப் பொடி தூவுவதும், எமது ஆட்சி ஆரம்பித்து வைத்த 'கம்பெரலிய' என்ற ஊரெழுச்சி வேலைத்திட்டங்களை இடைநிறுத்தி வைப்பதும் ஆகும்.

நாட்டின் நிதி தொடர்பான பொறுப்பும், இறுதி முடிவெடுக்கும் அதிகாரமும் நாடாளுமன்றத்திடமே உள்ளது. அரச அமைச்சுக்களின் எந்த ஒரு நிதி ஒதுக்கீட்டு மற்றும் செலவு நடவடிக்கைகளும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்ட பின்னரே செல்லுபடியாகும்.

இதேபோல் கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை கண்காணிக்கும், இடைநிறுத்தும் அதிகாரமும் நாடாளுமன்றத்துக்கே உள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய எமது பக்கமே பெரும்பான்மைப் பலம் உள்ளது.

இதன் ஓர் அம்சமாக நாம் எதிர்வரும் 29 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றும் வகையில், பிரதமர் அலுவலகச் செயலாளரின் நிதி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பிரேரணையை இன்று (நேற்று) சபாநாயகரிடம் கையளித்துள்ளோம்.

இது ஓர் ஆரம்பம் மட்டுமே. இதை தொடர்ந்து, இந்த மிளகாய்ப் பொடி மஹிந்த ஆட்சியின், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கு எதிராகவும் நாம் இத்தகைய பிரேரணைகளைக் கொண்டு வருவதுடன், இந்த நிழல் ஆட்சியின் நிதி நடவடிக்கைகளை நாம் முற்றாக முடக்குவோம் – என்றார். (ஐ)

## நாடாளுமன்றத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, நாடாளுமன்றப் பார்வையாளர் கூடத்துக்கு நேற்று (கலரி) மக்களும், விசேட விருந்தினர்களும் அனுமதிக்கப்படவில்லை.

சாதாரண கலரியில் பொது மக்களும், சபாநாயகர் கலரியில் விருந்தினரும் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளை வழமையாக அவதானிப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்துக்குள் மோதல் ஏற்பட்டதையடுத்து பார்வையாளர் கலரியிலிருந்த சிலர், மஹிந்த அணியினருக்கு எதிராகக் கூச்சலிட்டனர். இதன் காரணமாகவே இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது. (ஐ)

## மஹிந்தவை எதிர்த்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கான ஏற்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் அந்தக் கட்சி நாடியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நாடாளுமன்றில் இரு தடவைகள் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 122 எம்.பிக்கள் ஆதரவு வழங்கினர். இதில் கூட்டமைப்பு எம்.பிக்களும் அடங்குவர். ஆயினும், அந்தப் பிரேரணை நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு அமைவாக நிறைவேற்றப்படாமையால் அதனை ஏற்கமுடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து வருகிறார்.

இந்நிலையில், மஹிந்தவுக்கு எதிராக வாக்களித்த 122 எம்.பிக்களுக்கும் இலக்கமிடப்பட்ட பதாகைகளை வழங்கி அவர்களை ஜனாதிபதி செயலகம் முன்பாக அல்லது சுதந்திர சதுக்கத்தில் நிறுத்தி பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு மஹிந்தவுக்கான எதிர்ப்பை சர்வதேசத்துக்குக் காண்பிக்கும் நடவடிக்கையில் ஐ.தே.க. இறங்கியுள்ளது.

இதன் ஓர் அங்கமாக நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்துகொண்டிருந்தவேளை, அங்கு நுழைந்த ஐ.தே.க. எம்.பிக்களான கபீர் காசிம், மாரசிங்க, இரான் விக்கிரமரட்ன, ஜனம்பதி விக்கிரமரட்ன, அஜித் பி பெரேரா மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்த எதிர்ப்புப் போராட்டத்துக்குக் கூட்டமைப்பின் ஆதரவையும் நாடியுள்ளனர் எனத் தெரிவருகின்றது. (ஐ)

## சூழ்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வுக்குச் சபாநாயகர் கரு ஜெயசூரிய வருகை தரவில்லை. பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறியே நாடாளுமன்றத்தைக் கூட்டினார்.

இதையடுத்து, புதிய தெரிவுக் குழுக்களைத் தெரிவு செய்யும் செயற்பாடு குறித்து அறிவிக்கப்பட்டபோது அதற்கு ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அரசு ஒன்று இல்லாத நிலையில் தெரிவுக்குழுக்களை அமைக்க முடியாது என்றும் அவர்கள் கூறினார்.

இந்த நிலையில், நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக, நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய, நாடாளுமன்றம் நாளை 23ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக பிரதிச் சபாநாயகர் அறிவித்தார்.

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மதிய உணவை உட்கொண்ட 36 மாணவர்களும் வைத்தியப் பரிசோதனைக்காக மாங்குளம் மற்றும் மல்லாவி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள வன்னிவிளாங்குளம் பாடசாலையில் நேற்று மதியம் வழங்கப்பட்ட மதிய உணவைப் பெற்றுக் கொண்ட மாணவி ஒருவரின் சாப்பாட்டுக் கோப்பைக்குள் உயிரிழந்த நிலையில் முழுமையான பல்லி ஒன்று காணப்பட்டது.

இதனையடுத்தே மதிய உணவை உட்கொண்ட 36 மாணவர்களும் உடனடியாக மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மாங்குளம் வைத்தியசாலையில் போதிய இடவசதியின்மையால் இதில் 16 மாணவர்கள் மல்லாவி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பில் மாங்குளம் வைத்தியசாலையில் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இந்தப் பாடசாலையில் வழங்கப்பட்ட மதிய உணவில் உயிரிழந்த பல்லி காணப்பட்டமை தொடர்பில் உணவில் ஏதாவது நச்சுத்தன்மை ஏற்பட்டு மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆயினும் மாணவர்களில் வித்தியாசங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

வலயக்கல்வித்திணைக்களத்துக்கு அண்மித்த பகுதியில் இப்பாடசாலைக்குச் சென்று மாணவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களை உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி உத்தியோகத்தர்களுடன் சென்று பார்வையிட்டனர் – என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சபாநாயகர் எடுத்த தீர்மானம் சட்ட விரோதமானது எனத் தெரிவித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்றுத் தாக்கல் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளாகச் சபாநாயகர், சட்டமா அதிபர் மற்றும் நாடாளுமன்றச் பொதுச் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் கலைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்குச் சபாநாயகர் மேற்கொண்ட தீர்மானம் அரசமைப்புக்கு விரோதமானது என அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்றம் கூட்டப்பட்டதால் நாட்டின் அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாகவும், இந்தச் செயற்பாட்டினால் சபாநாயகர் உட்பட பிரதிவாதிகள் அரசமைப்புச் சீர்திருத்தத்தை மீறியுள்ளனர் எனவும் தீர்ப்பு வழங்குமாறு அதில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## ஞானசாரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேன அமைப்பின்

பொதுச்செயலாளர் ஞானசார தேரரை பொதுமன்னிப்பில் விடுவிக்கக் கோரி அந்த அமைப்பின் பிக்குகள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தக் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

பொதுபல சேன அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்டது. அவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியே பொதுபல சேன அமைப்பினர் இந்த எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)

## மஹிந்த அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

அடக்குமுறைகள் மூலம் ஆட்சியைப் பிடித்துக் கொண்டுள்ள சட்டவிரோத அரசு தொடர்ந்தும் ஆட்சியில் நீடிக்க மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் முறியடிக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் போலி அரசின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலும் டுவிட்டர் பதிவிலும், ஹக்கீம் இந்த விடயங்களைக் கூறியுள்ளார். (ஐ)

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை கூறியுள்ளார்.

கட்சித்தலைவர்களுடன் நேற்று (நேற்று முன்தினம்) மாலை இடம்பெற்ற சந்திப்பில் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக, இன்று (நேற்று) நாடாளுமன்ற அமர்வில் அமைதியைப் பேணிய அனைத்து கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள். என ஜனாதிபதி பதிவிட்டுள்ளார். (ஐ)

## வெட்கமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மூன்று நாள்கள் மூன்று தடவைகள் அவருக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டப்பட்டபோதும் அவர் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருக்கின்றார். இது வெட்கக்கேடு.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வின் பின்னர் நேற்று மதியம் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றக் குழு அறையில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியிருந்தன. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மஹிந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குரல் மூலமான வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. ஆனால், குரல் மூல வாக்கெடுப்புத் தீர்மானத்துக்கு மஹிந்த தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிப்பதால் பெயர் குறிப்பிட்டு வாக்கெடுப்பை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருப்பதாக இன்றைய (நேற்று) கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கூறினோம். அதற்கு மஹிந்த தரப்பினர் இணங்கவில்லை. அவர்களுக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், பிரதமர் செயலாளரின் செலவீனங்களை இடைநிறுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு பிரேரணையைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். இது எமது முதலாவது நடவடிக்கையாகும். இதனை எதிர்வரும் 29ஆம் திகதி விவாதத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து உலக நாடுகளின் தூதுவர்களுக்குச் சம்பந்தன் இந்தச் சந்திப்பில் விளக்குவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து விலக்கிய ஜனாதிபதி புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்துள்ளமையால் நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை தீவிரமடைந்துள்ளது. இந்த நெருக்கடி நிலை உச்சக் கட்டத்தை எட்டியுள்ளதால் நாடாளுமன்றச் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளன. கடந்த இரு தினங்கள் நாடாளுமன்றத்தில் கடும் மோதல் ஏற்பட்டது. இதில் எம்.பிக்கள் சிலர் காயமடைந்தனர்.

ஜனாதிபதி மேற்கொண்ட இந்தச் சட்டவிரோத பிரதமர் நியமனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடுமையாக எதிர்த்து வருகின்றது. ஜனநாயகத்தை மீறும் வகையில் ஜனாதிபதி மேற்கொண்ட இந்தச் செயற்பாட்டுக்கு எதிராகக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வருகின்றது.

தனது செயற்பாட்டுக்குக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற ஜனாதிபதி முயன்றபோது அதனைக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித்துவிட்டது.

இந்நிலையில், தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலை குறித்து விளக்குவதற்கும், ஜனாதிபதியின் சட்டவிரோத செயற்பாடு தொடர்பில் எடுத்துரைப்பதற்கும் இன்று உலக நாடுகளின் தூதுவர்களைச் சந்திக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இந்தச் சந்திப்பில் பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, நோர்வே, கனடா, இத்தாலி, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், தென்கொரியா, அமெரிக்கா, பெல்ஜியம், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. ஆகியவற்றின் தூதுவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இனவாத பௌத்த அமைப்புகளுடன் கைகோர்க்கிறார் ஜனாதிபதி மைத்திரி

## ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்க இணக்கம்

அரசியல் நெருக்கடியால் நாடு குழப்பமடைந்துள்ள நிலையில் இனவாத பௌத்த அமைப்புகளுடன் ஜனாதிபதி கைகோர்த்துள்ளமை பெரும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் ஜப்பான் பயணத்தின்போது ரோக்கியோவில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதியுடன் ஞானசார தேரர் பங்கேற்றார். அவர் பங்கேற்றதற்கும் தமக்கும் எந்த தொடர்புமில்லை என உடனடியாக மறுப்பு வெளியிட்டிருந்த ஜனாதிபதி தற்போது இனவாத அமைப்புகளுடன் கூட்டுச்சேருவது சிறுபான்மையினருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கலகொட ஞானசார தேரருக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது. இந்த் தண்டனைக்கு ஆட்சேபனை தெரிவித்து உயர் நீதிமன்றில் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் ஞானசார தேரர் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில் ஞானசாரத் தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி பொது பல சேன மற்றும் சிங்களயே அபி தேசிய அமைப்பு உள்ளிட்ட மேலும் சில பௌத்த இனவாத அமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தேரர்கள் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்துக்கு முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லவைப்பதற்காக தேரர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தைமேற்கொண்டிருந்தனர்.

எனினும் தேரர்களை அழைத்து பேச்சு நடத்திய ஜனாதிபதி, பொலிஸாரின் நடவடிக்கைக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருந்தார். அத்துடன், பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு உத்தரவு வழங்கிய அதிகாரி தொடர்பில் விசாரணைகளைமுன்னெடுக்குமாறுபொலிஸ்மா அதிபருக்குஜனாதிபதிஉத்தரவிட்டார்.

இந்த நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்புத்தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொதுபல சேனா அமைப்பு, தமது போதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை நீக்கிப் பொது மன்னிப்பு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தது.

பௌத்த தேரர் ஒருவர் இவ்வாறு சிறைத் தண்டனை அனுபவிப்பதை ஜனாதிபதி விரும்பவில்லை எனவும் தமது கொள்கையுடன் ஜனாதிபதி உடன்படுகிறார் என்றும் பொதுபல சேனா அமைப்பினர் தெரிவித்தனர்.

இன்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தேரர்கள் கையில் தனிச் சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போலித் தேசியக் கொடியை வைத்திருந்தனர். (ஐ)

## தேரர்கள் மீது கண்ணீர்ப்புகை: விசாரிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, நவ.20

தேரர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மேற்கொள்ள உத்தரவிட்டவர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொதுபல சேன அமைப்பினர் நேற்றுத் திங்கட்கிழமை மகஜர் ஒன்றை வழங்குவதற்காக ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் மீது கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மேற்கொண்ட விடயம் தொடர்பில் ஜனாதிபதி தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து தேரர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடிய ஜனாதிபதி ஞானசார தேரரின் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் தேரர்களினால் வழங்கப்பட்ட மகஜரையும் பெற்றுக் கொண்டார்.

## நாடாளுமன்ற மோதல்களுக்கு சபாநாயகரே பொறுப்பாவார்

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 20

சபாநாயகர் கரு ஜயசூரியவினால் சர்வாதிகார அடிப்படையில் செயற்பட முடியாது. நாடாளுமன்றில் நடந்த கசப்பான சம்பவங்கள் அனைத்துக்கும் கரு ஜயசூரியவே பொறுப்பு எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் தற்பொழுது நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுச் சக்திகள் தலையீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு கரு ஜயசூரிய உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றில் அண்மையில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள் அனைத்துக்கும் கரு ஜயசூரியவே பொறுப்புச் சொல்லவேண்டும்.

தற்பொழுது நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகள் சட்ட ரீதியானதா என்ற கேள்வி எழுகின்றது.

அந்த நிலையில் உயர்நீதிமன்றின் இடைக்கால உத்தரவின் அடிப்படையில், நாடாளுமன்றம் கூட்டப்பட்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றில் மனுவொன்று இன்று(நேற்று) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டத்திற்கு அமைய அரச ஊழியர்கள் பணியாற்ற வேண்டும்.

அதிகார மோகத்தினால் ஐக்கிய தேசியக் கட்சியினர் இவ்வாறு குழப்பங்களைச் செய்து வருகின்றனர்.

நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதிமன்றத்துக்கும் இடையில் முரண்பாட்டு நிலையை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் – என்றார். (ஐ)

## கருவைப் பதவி விலக்குவதே அரசியல் நெருக்கடிக்கு தீர்வு

### பீரிஸ் முன்வைக்கும் யோசனை இது

கொழும்பு, நவ. 20

நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வு சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினை கொண்டு வந்து அவரைப் பதவி விலக்குவதேயாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவதாக இருந்தால் உடனடியாக அவரே சுயமாகப் பதவி விலகிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் தனது விசுவாசத்தை ரணிலுக்கு வெளிப்படுத்தலாம். அதற்கு நாம் எவ்வித தடைகளையும் ஏற்படுத்த மாட்டோம்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற அரசியல் நெருக்கடியினை சபாநாயகரே தீவிரப்படுத்தியுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக முதலில் நம்பிக்கையில்லாப் பிரேரணையினை கொண்டு வந்து நிறைவேற்றி பதவி விலக்க வேண்டும். – அல்லது அவரே தனது அரசியல் மற்றும் தனிப்பட்ட கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள சுயமாகப் பதவி துறக்க வேண்டும் – என்றார். (ஐ)

## நாட்டின் ஜனநாயக விழுமியங்களை நிலை நாட்டக் கோரிப் போராட்டம்

கொழும்பு, நவ. 20

நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் நிலைநாட்டுமாறு கோரிமக்கள் விழிப்புணர்வு பேரணியொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் விழிப்புணர்வுப் பேரணி சுதந்திர சதுக்கத்தில் நேற்றுத் திங்கட்கிழமை 'எழுவோம்' எனும் கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


இந்த விழிப்புணர்வுப் பேரணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்துகொண்டுள்ளமையுடன், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நாட்டில் தற்போது நிலவும் அரசியல் குழப்பநிலை காரணமாக அதிருப்தியடைந்துள்ள பொதுமக்கள் ஒன்றிணைந்து எமது தேசத்தின் ஜனநாயக விழுமியங்களை மீண்டும் நிலைநாட்டுவோம் எனும் கருப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணியை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

## எந்தத் தேர்தலுக்கும் முகம் கொடுப்போம்

### நாமல் எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, நவ. 20

ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ எந்தத் தேர்தலுக்கும் முகங் கொடுக்கத் தமது தரப்பு தயாராகவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் எடுத்துள்ள தீர்மானத்தைப் பாதுகாப்பதற்காக சில தியாகங்களைச் செய்துள்ளார்.

எனவே அதற்கான கௌரவத்தை ஜனாதிபதிக்கு வழங்குகிறோம். 113 பெரும்பான்மையைக் காட்டுவது குறித்து எமது தரப்புக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.